# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2009/8 - 2017 මාර්තු මස 07 වැනි අඟහරුවාදා - 2017.03.07

*2009/8 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி 13/2013 (ஒழுங்குவிதிகள்)*

**2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சமுர்த்திச் சட்டம்**

*2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சமுர்த்திச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின்கீழ் சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

எஸ். பீ. திசாநாயக்க,<br>
சமூக வலுவூட்டல் மற்றும்<br>
நலனோம்புகை அமைச்சர்.

கொழும்பு,<br>
*2017, மாச்சு 06.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சமுர்த்தி ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள் பின்வருவனவற்றை குறித்துரைக்கின்றன :

(அ) சமுர்த்தி பயனுகரிகளின் தெரிவு தொடர்பிலான மூலப்பிரமாணம்;

(ஆ) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புக்கள், சமுர்த்தி பிராந்திய ஒழுங்கமைப்புக்கள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சமாசங்களின் அமைப்பு மற்றும் நிருவாகக் கட்டமைப்பு மற்றும் அதன்கண் முதலாவது கூட்டம் தொடர்பான ஏற்பாடுகள்;

(இ) சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான பொதுச் சின்னம்; அத்துடன்

(ஈ) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகள், சமுர்த்தி பிராந்திய ஒழுங்கமைப்புகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சமாசத்தின் பணிகளை நிறைவேற்றுவதில் எழக்கூடிய பிணக்குகளின் தீர்வுக்கான நடவடிக்கைமுறை.

3. (1) (அ) ஆள் ஒவ்வொருவரும் அல்லது குடும்ப அலகானது, இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வரும் தேதிக்கு உடனடுத்து நேர்முற்போந்த நாளன்று சட்டத்தின் பிரிவு 44(ஏ) இன் ஏற்பாடுகளின்படி ஏதேனும் நலன்பேணல் அனுகூலம் பெறுவதற்கு அல்லது பெற்றுவருவதற்கு உரித்துடையவராவார்;

(ஆ) எந்த நிருவாக மாவட்டத்தினுள் அத்தகைய பிரதேச செயலாளர் பிரிவு அமைந்துள்ளதோ அந்த நிருவாக மாவட்டத்திற்காக தாபிக்கப்பட்ட சமுர்த்தி மாவட்டக் குழுவொன்றிற்கு மதியுரைஞராக பணிபுரிகின்றவரான இயைபான பிரதேச செயலாளர்கள் பிரிவொன்றின் பிரதேச செயலாளரின் விதப்புரையின் மேல் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் அல்லது குடும்ப அலகு ஒவ்வொன்றும்; அத்துடன்

(இ) அந்நிருவாக மாவட்டத்திற்காக தாபிக்கப்பட்ட சமுர்த்தி மாவட்டக் குழுவின் மதியுரை நபரொருவராகப் பணிபுரிகின்றவரான இயைபான நிருவாக மாவட்டமொன்றின் மாவட்டச் செயலாளரின் விதப்புரையின்மேல் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் அல்லது குடும்ப அலகு ஒவ்வொன்றும்,

சமுர்த்தி பயனுகரி ஒருவராகத் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் சமுர்த்தி மானியப்படியைப் பெறவும் உரித்துடையவராதல் வேண்டும்.

(2) எந்த திணைக்களத்தில் சாதாரண அல்லது நிரந்தர ஊழியர் உள்ளடங்குகின்றாரோ அந்த திணைக்களத்தின் சாதாரண அல்லது நிரந்தர ஊழியரொருவரான எவரேனும் ஆளொருவர் அல்லது குடும்ப அலகொன்று சமுர்த்தி பயனுகரியொருவராகத் தெரிவுசெய்யப்படுவதற்கு தகைமையுடையவராதலாகாது.

4. (1) (அ) ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பின் அமைப்பு மற்றும் நிருவாகக் கட்டமைப்பானது இதற்கான அட்டவணை “அ” இல் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்;

(ஆ) ஒவ்வொரு சமுர்த்தி பிராந்திய ஒழுங்கமைப்பின் அமைப்பு மற்றும் நிருவாகக் கட்டமைப்பானது இதற்கான அட்டவணை “ஆ” இல் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(இ) ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சமாசத்தின் அமைப்பு மற்றும் நிருவாகக் கட்டமைப்பானது இதற்கான அட்டவணை “இ” இல் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(2) (இதனகத்துப்பின்னர் “ஒழுங்கமைப்பு” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பு, சமுர்த்தி பிராந்திய ஒழுங்கமைப்பு மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சமாசம் (இதனகத்துப்பின்னர் “சமாசம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஒவ்வொன்றினதும் அமைப்பு மற்றும் நிருவாகக் கட்டமைப்பின் பிரதியொன்று பந்தி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட இயைபான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதான இயைபான வடிவத்தில் அத்தகைய ஒழுங்கமைப்பு அல்லது சமாசம் ஒவ்வொன்றிற்கும் ஒத்ததாக உள்ள விபரங்களை உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு மற்றும் நிருவாகக் கட்டமைப்பின் பிரதியொன்று இவ்வொழுங்குவிதிகளின் வெளியீட்டுத் தேதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதியொன்றிற்குள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி,அதன் பெறுவனவின் நாற்பத்தைந்து நாட்கள் காலப்பகுதியொன்றினுள் பந்தி (2) இன் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக தனது அமைப்பு மற்றும் நிருவாகக் கட்டமைப்பை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்கும் ஒவ்வொரு ஒழுங்கமைப்பிற்கும் அல்லது சமாசத்திற்கும் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

5. (1) இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து :-

(அ) ஒவ்வொரு ஒழுங்கமைப்பின் முதலாவது பொதுக் கூட்டமானது ஒரு மாதகாலப் பகுதியினுள் நடாத்தப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சமாசத்தின் முதலாவது பொதுக் கூட்டமானது இரண்டு மாத காலப்பகுதியினுள் நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட திணைக்களத்தின் அலுவலரொருவர், அத்தகைய கூட்டத்தினைக் கூட்டுவதற்கும் அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்குவதற்கும் அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென்பதுடன் அதன்மீது பின்வரும் தொழிலை நடத்துதல் வேண்டும்:-

(அ) உறுப்பினர்களின் வாக்குகளின் பெரும்பான்மையானது இயைபான ஒழுங்கமைப்பின் அல்லது சமாசத்தின் முதலாவது ஆளும் குழுவினை தெரிவுசெய்தல்;

(ஆ) உறுப்பாண்மைக் கட்டணத்தை தீர்மானிப்பதற்கு தீர்மானமொன்றினை ஏற்றல்;

(இ) இயைபான ஒழுங்கமைப்பு அல்லது சமாசத்தின் முதன்மை அலுவலகத்தின் அமைவிடத்தினை தீர்மானிப்பதற்கு பிரேரணையினை ஏற்றல்;

(ஈ) ஆளும் குழுவின் முதலாவது கூட்டத்திற்கான திகதியினை நிர்ணயித்தல்; அத்துடன்

(உ) இயைபான ஒழுங்கமைப்பு அல்லது சமாசத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான வேறு எவையேனும் பிரேரணைகளை ஏற்றல்.

6. (1) ஒழுங்குவிதி 4 (3) இன்கீழ் சான்றிதழொன்று வழங்கப்பட்டுள்ள ஏதேனும் ஒழுங்கமைப்பு அல்லது சமாசம் தொடர்பில், அத்தகைய ஒழுங்கமைப்பு அல்லது சமாசம் ஒழுங்குவிதி 4 (2) இன்கீழ் தனக்கு சமர்ப்பிக்கப்பட்ட அதனது அமைப்பு மற்றும் நிருவாகக் கட்டமைப்பின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்படுகிறது என பணிப்பாளர் தலைமையதிபதிக்குத் தோன்றுமிடத்து அல்லது அவர் முறைப்பாடொன்றைப் பெறுகின்றபோது, பணிப்பாளர் தலைமையதிபதி அதன் சார்பாக தன்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் அணியொன்றினால் விசாரணையொன்று நடாத்தப்படுவதை செய்வித்தல் வேண்டும்.

(2) (அ) பந்தி (1) இன்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் அணி, பந்தி (1) இன்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அவர்களுக்கு குறிப்பீடுசெய்யப்பட்ட விடயத்தின்மேல் விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டும் என்பதுடன் விசாரணையின்போது எடுக்கப்பட்ட வாக்குமூலங்கள் விசாரணையின்போது பரீட்சிக்கப்பட்ட இயைபான ஆவணங்கள் மற்றும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளின்மீதான அவர்களின் விதப்புரைகள் உள்ளடங்கிய அத்தகைய விசாரணையின்மீதான அறிக்கையொன்றையும் தயாரித்தல் வேண்டும்.

(ஆ) உட்பந்தி (அ) இன்கீழ் விசாரணையொன்றுக்காக ஆற்றுப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து ஒருமாத காலப்பகுதியொன்றிற்குள் முடிக்கப்படுதல் வேண்டும்.

(3) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பொன்று தொடர்பில் விசாரணை நடாத்தப்பட்டுள்ளவிடத்தும் அத்தகைய சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பு, ஒழுங்குவிதி 4 (2) இன்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட அதனது அமைப்பு மற்றும் நிருவாகக் கட்டமைப்பின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றியுள்ளது என விசாரணையின் முடிவில் பணிப்பாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஒழுங்கமைப்பு:-

(அ) அதனது குறிக்கோள்களை எய்துவதில் பணியாற்றாது எனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் சட்டத்தின் பிரிவு 14 இன் ஏற்பாடுகளின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்;

(ஆ) ஒழுங்குவிதி 4(3) இன்கீழ் அத்தகைய ஒழுங்கமைப்புக்கு வழங்கப்பட்ட சான்றிதழ் இல்லாதொழித்தலுக்கு அமைந்ததாதல் ஆகலாம்.

(4) (அ) சமுர்த்தி பிராந்திய ஒழுங்கமைப்பொன்று அல்லது சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சமாசமொன்று தொடர்பில் விசாரணை நடாத்தப்பட்டு, அத்தகைய ஒழுங்கமைப்பு அல்லது சமாசம், ஒழுங்குவிதி 4 (2) இன்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட அதனது அமைப்பு மற்றும் நிர்வாகக் கட்டமைப்பின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றியுள்ளது என விசாரணையின் முடிவில் பணிப்பாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்பட்டுள்ளவிடத்து, அவர் அத்தகைய மீறுகைக்கான காரணத்தை விளங்கப்படுத்துவதற்கு இயைபான ஒழுங்கமைப்பு அல்லது சமாசத்தின் ஆளும் குழுவுக்கு சந்தர்ப்பம் வழங்குவார்.

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி, இயைபான ஒழுங்கமைப்பு அல்லது சமாசத்திற்கு அத்தகைய மீறுகைக்கு நியாயமான காரணங்கள் இருக்கின்றதாகவும் அத்தகைய ஒழுங்கமைப்பு அல்லது சமாசத்தின் உரிய பணிக்கு உதவி அல்லது வழிகாட்டிநெறிகள் தேவையாக இருப்பதாகவும் கருதுகின்றவிடத்து, அவர் அத்தகைய ஒழுங்கமைப்பு அல்லது சமாசத்திற்கு அவசியமான உதவி அல்லது வழிகாட்டிநெறிகளை வழங்குதல் வேண்டும்.

(இ) பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய மீறுகைக்கு நியாயமான காரணம் இல்லை எனக் கருதுகின்றவிடத்து, அவர்,-

(i) இயைபான ஒழுங்கமைப்பு அல்லது சமாசத்தின் ஆளும் குழுவைக் கலைத்தவாறான அறிவித்தலொன்றை வழங்குவார்;

(ii) புதியதொரு ஆளும் குழு நியமிக்கப்படும்வரை, அத்தகைய ஒழுங்கமைப்பு அல்லது சமாசத்தின் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதற்கு திணைக்களத்திலிருந்து மூன்றிற்குக் குறையாததும் ஐந்து அலுவலர்களுக்கு மேற்படாததுமானவர்களைக் கொண்ட இடைக்கால ஆளும் குழுவொன்றை நியமிப்பார்;

(iii) இயைபான ஒழுங்கமைப்பு அல்லது சமாசத்திற்கான புதியதோர் ஆளும்குழுவை தேர்ந்தெடுக்கும் நோக்கத்திற்காக, அவரின் அறிவித்தலிலிருந்து அறுபது நாட்களுக்கு பிந்தாமல் பொதுக் கூட்டமொன்றை நடாத்துவதற்கு இடைக்கால ஆளும் குழுவைப் பணிக்கலாம்;

(iv) அவசியமேற்படின், ஒழுங்குவிதி 4 (3) இன்கீழ் அத்தகைய ஒழுங்கமைப்பு அல்லது சமாசத்திற்கு வழங்கிய சான்றிதழை இல்லாதொழிக்கலாம் என்பதுடன் ஒழுங்குவிதி 4 (2) இல் குறித்துரைக்கப்பட்டவாறான இயைபான ஒழுங்கமைப்பு அல்லது சமாசத்தின் புதியதொரு அமைப்பு மற்றும் நிருவாகக் கட்டமைப்பை சமர்ப்பிப்பதற்கு புதிய ஆளும் குழுவைப் பணிக்கலாம்.

7. பணிப்பாளர் தலைமையதிபதி, ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் இதற்கான அட்டவணை ‘ஈ’ இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பொருளளவில் உறுப்பாண்மை அட்டையொன்றை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

8. (1) இதற்கான அட்டவணை ‘உ’ இல் தரப்பட்டுள்ள பொதுச்சின்னமானது, (இதனகத்துப்பின்னர்“சமுர்த்தி பொதுச்சின்னம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பொதுச் சின்னமாதல் வேண்டும் என்பதுடன்,சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு உத்தியோகபூர்வ ஆவணம், தொடர்பாடல், படிவம் அல்லது அறிவித்தலில் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியின் எழுத்தினாலான முன்னங்கீகாரம்,சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் ஏதேனும் நோக்கத்துக்காக,சமுர்த்தி பொதுச் சின்னத்தைப் பயன்படுத்துவதற்காக பெறப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரமளிக்கப்படாத நோக்கமொன்றிற்கு சமுர்த்திபொதுச் சின்னத்தைப் பயன்படுத்துகின்றவரான எவரேனும் ஆளொருவர்,சட்டத்தின்கீழ் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும்.

9. (1) சட்டத்தின்கீழ் அதன் பணிகளை நிறைவேற்றுகையில் ஒழுங்கமைப்பின் அல்லது சமாசத்தின் உறுப்பினர்களுக்கிடையில் பிணக்கொன்று எழுகின்றவிடத்து, இயைபான ஒழுங்கமைப்பு அல்லது சமாசத்தின் ஆளுகின்ற குழு பிணக்குகளைத் தீர்த்து வைப்பதில் ஈடுபடுவதற்கு பணிப்பாளர் தலைமையதிபதியுடன் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருடனான கலந்தாலோசனையுடன் அத்தகைய பிணக்கினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

(2) இயைபான ஒழுங்கமைப்பின் அல்லது சமாசத்தின் ஆளுகின்ற குழு ஏதேனும் அத்தகைய பிணக்கினைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய எழுத்திலான அறிக்கையினை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் பிணக்குக்கான திறத்தவர்களுக்கு எழுத்தில் அதனை அறிவித்தலும் வேண்டும்.

10. (1) சட்டத்தின்கீழ் அதன் பணிகளை நிறைவேற்றுவதில் இரண்டு ஒழுங்கமைப்புக்களுக்கிடையில் அல்லது பல ஒழுங்கமைப்புகளுக்கு மத்தியில் பிணக்கொன்று எழுகின்றவிடத்து, இயைபான ஒழுங்கமைப்புகளில் ஏதேனும் ஒன்றின் ஆளுகின்ற குழு அத்தகைய முறைப்பாட்டில் பிணக்கிற்கான ஏனைய திறத்தவர் அல்லது திறத்தவர்களை குறிப்பிடுகின்ற எழுத்திலான முறைப்பாடொன்றை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு உடனடியாக செய்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி (1) ஆம் பந்தியின்கீழ் எம்முறைப்பாடு ஆக்கப்பட்டதோ அம்முறைப்பாடு தொடர்பில் பிணக்குகளைத் தீர்க்கும் நோக்கத்திற்காக மூன்று உறுப்பினர்களுக்கு குறையாமலுள்ள குழுவொன்றை நியமித்தல் வேண்டும்.

(3) இரண்டாம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட குழுவானது திணைக்களத்திலிருந்து அலுவலரொருவரை உள்ளடக்கியிருத்தல் வேண்டுமென்பதுடன் இயைபான பிணக்கிற்கான திறத்தவர்களாகவிராத ஒழுங்கமைப்புகளின் ஆளும் குழுக்களின் உறுப்பினர்களிடையேயிருந்து நியமிக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(4) இரண்டாம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட குழுவானது அத்தகைய ஏதேனும் பிணக்கினைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி எழுத்திலான அறிக்கையொன்றினை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் அதனை பிணக்கிற்கான திறத்தவர்களுக்கு எழுத்தில் அறிவித்தலும் வேண்டும்.

11. ஒழுங்குவிதிகள் 9 அல்லது 10 இன்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளினால் பாதிப்புற்ற ஏதேனும் ஒழுங்கமைப்பு அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

12. (1) சட்டத்தின்கீழ் அவர்களுடைய பணிகளைப் புரிவதில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் அல்லது சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களுக்கிடையில் பிணக்கொன்று எழுகின்றவிடத்து, இயைபான வங்கிகள் அல்லது வங்கித்தொழிற் சங்கங்களின் ஆளுகின்ற குழு அத்தகைய முறைப்பாட்டில் பிணக்கிற்கான ஏனைய திறத்தவர் அல்லது திறத்தவர்களைக் குறிப்பிட்டு பணிப்பாளர் தலைமையதிபதிக்கு உடனடியாக எழுத்திலான முறைப்பாடொன்றினைச் செய்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி (1) ஆம் பந்தியின்கீழ் எம்முறைப்பாடு ஆக்கப்பட்டதோ அம்முறைப்பாடு தொடர்பில் பிணக்கினைத் தீர்க்கும் நோக்கத்திற்காக மூன்றுக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றினை நியமித்தல் வேண்டும்.

(3) இரண்டாம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட குழு, திணைக்களத்திலிருந்து அலுவலரொருவரையும் இயைபான பிணக்கிற்கு திறத்தவர்களாகவிராதவரான திறத்தவர்களான வங்கிகள் மற்றும் வங்கித்தொழிற் சங்கங்களின் ஆளுகின்ற குழுக்களின் உறுப்பினர்களுக்கிடையிலிருந்து நியமிக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(4) இரண்டாம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட குழு அத்தகைய ஏதேனும் பிணக்கினைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி எழுத்திலான அறிக்கையொன்றை வைத்திருத்தலும் வேண்டுமென்பதுடன் பிணக்கிற்கான திறத்தவர்களுக்கு எழுத்தில் அதனை அறிவித்தலும் வேண்டும்.

13. ஒழுங்குவிதி 12 இன்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளினால் பாதிப்புற்ற ஏதேனும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கி அல்லது சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களின் முகாமைச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

14. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலன்றி-

"சட்டம்" என்பது, 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சமுர்த்திச் சட்டம் எனப் பொருள்படும்;

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, சட்டத்தின் பிரிவு 3 இன்கீழ் நியமிக்கப்பட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

"திணைக்களம்" என்பது, சட்டத்தின் பிரிவு 2 இன்கீழ் தாபிக்கப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் எனப் பொருள்படும்;

"ஆளும் குழு" என்பது, இயைபான அமைப்பு மற்றும் நிருவாகக் கட்டமைப்பில் குறித்துரைக்கப்பட்டவாறான இயைபான சமுர்த்தி ஒழுங்கமைப்பு அல்லது சமாசத்தின் விடயத்துக்கேற்ப, நிறைவேற்றுப்பேரவை, பணிப்பாளர்கள் சபை அல்லது முகாமைச்சபை அல்லது சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியின் முகாமைச்சபை அல்லது விடயத்துக்கேற்ப சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு எனப் பொருள்படும்.

[ஒழுங்குவிதி - 4(1)(அ)]

**அட்டவணை 'அ'**

*சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பின் அமைப்பு மற்றும் நிருவாகக் கட்டமைப்பு*

**முன்னுரை**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் சட்டமாக்கப்பட்ட 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க,சமுர்த்தி சட்டத்திற்கிணங்க, பொருளாதார அபிவிருத்திச் செயல்முறையின் ஊக்குவிப்புக்காகவும், தனிநபர், குடும்பம்,குழு மற்றும் சமுதாயம் இச்சட்டத்தின் முன்னுரிமைகளாகவும், வறுமையை ஒழிப்பதற்கும் சமூக நீதியை உறுதிப்படுத்துவதற்குமான தேசிய கொள்கையை வலுவூட்டும் பாரிய குறிக்கோளை உயிர்ப்பூட்டுவதற்கு வலய, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலான ஒருங்கிணைப்பு வலையமைப்பில் ஆரம்ப அலகாகவும், இச்சமுர்த்தி பிராந்திய ஒழுங்கமைப்புகள் தேசிய தேவைப்பாட்டை நிறைவேற்றும் பொறுப்பைத் தாங்கும். முக்கியமானதும், விரிவானதுமான ஆரம்பத்திற்கு தாபிக்கப்பட்ட எல்லாப் பணிகளையும் திறந்த மற்றும் வெளிப்படையான முறையில் நிறைவேற்றவும், சட்டத்தின் நீதியையும் சட்டத்தின் சமமான உதவியை எல்லா உறுப்பினர்களுக்கும் வகை செய்வதற்கும், பணியாட்தொகுதியினர் மற்றும் உறுப்பினர்கள் எப்பொழுதும் நல்லெண்ணத்துடன் செயற்படுகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்தவும், சமுதாயமானது, கட்சி அரசியலின்மேல் பிரிந்து விடாது அதன்மூலம் தேசிய ஒற்றுமையை உறுதிப்படுத்தும் சமுதாயத்தை, நல்லிணக்கத்தினூடாக இணைப்பதற்கும், பெறுமானங்கள் அழிவுறுவதைத் தடுக்கவும், கிடைக்கப்பெறும் வளங்களையும் சேவைகளையும் நியாயமாக அணுகுவதற்கு ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்காகவும் ஒழுக்கநெறியைக் கட்டியெழுப்பவும், சிக்கனம், சட்டத்தை மதித்தல், மரியாதை, சூழல்நட்பு, தன்னம்பிக்கை, புத்தாக்கம் மற்றும் கூட்டுப் பொறுப்புப் பழக்கங்களின் அபிவிருத்திக்காகவும், தேசிய, மத மற்றும் அரசியல் பிரிவுகளைப் பொருட்படுத்தாது அதிகார இடப்பரப்பின் ஒழுங்கமைப்பின் இச்சட்டத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு ஒழுங்கமைப்பு தாபிக்கப்படுகின்றது என உறுதிப்படுத்துகிறோம்.*

**அத்தியாயம் 01**

*அடிப்படை விடயங்கள்*

*1. பெயர் : (இடப்பரப்பின் பெயர்) ............................................... சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பு.*

*2. அதிகார இடப்பரப்பு :- (இதனகத்துப்பின்னர் "அதிகார இடப்பரப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ....................................... மாகாணத்தின் ........................ நிருவாக மாவட்டத்தில் ................................ பிரதேச செயலாளர்கள் பிரிவில் ................................ (உள்ளூரதிகாரசபை) அதிகார இடப்பரப்பினுள் .......................... வங்கியின் அதிகார இடப்பரப்பினுள் ......................................... (கிராம அலுவலர் பிரிவு) இன் ......................................................... (கிராமம்) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பு.*

*3. முகவரி :...........................................................................*

*4. தொலை நோக்கு : "வலுவூட்டப்பட்ட சுபீட்சமான ஒரு சமுதாயம்"*

*5. பணி : முகாமை மற்றும் தொடர்பாடல் திறன், வறுமையை ஒழித்தல் மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார அபிவிருத்தி மற்றும் சமூக வலுவூட்டலால் பூர்த்தி செய்யப்பட்ட வாழ்வாதார செயற்பாடுகளை மேம்படுத்துதல் மூலம் சமுதாய அடிப்படையிலான அதிகார இடப்பரப்பின் சமுதாயத்தின் மத்தியில் மேம்பட்ட மனப்பாங்குசார் அபிவிருத்தியை தாபிப்பதுடன் ஒவ்வொரு அம்சத்திலும் சமுதாயத்தினை வலுவூட்டுவதன் மூலம் தேசிய அபிவிருத்தித் தொழிற்பாட்டிற்கு பங்களிப்புச் செய்தல்.*

*6. குறிக்கோள்கள், தத்துவங்கள் மற்றும் பணிகள் : (இதனகத்துப் பின்னர் "ஒழுங்கமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ........................................ சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பு,2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின் பிரிவு 10 இல் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை எய்தும்பொருட்டு முறையே அச்சட்டத்தின் பிரிவு 11 மற்றும் 12 இல் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்கள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் இத்தால் பொறுப்பேற்கிறது.*

**அத்தியாயம் 02**

*உறுப்பாண்மை*

7. உறுப்பாண்மைக்கான தகவுடைமை :

(1) அதிகார இடப்பரப்பின், நிரந்தரமாக வசிக்கின்ற தோதான உடல் மற்றும் உளத் தகுதியுடன் இருக்கின்ற வயதுவந்தவரான சமுர்த்தி பயனுகரி ஒருவர்,……………………………….. சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பின் உறுப்பாண்மையைப் பெறத் தகவுடையவராவார்.

(2) ஒழுங்கமைப்பின் உறுப்பாண்மைக்கு தகைமைபெற்ற ஆளொருவர், இயைபான உறுப்பாண்மைக் கட்டணத்துடன் சேர்த்து உறுப்பாண்மைக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் அடுத்துறுநர் ஒருவரை விண்ணப்பத்தில் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(3) ஒவ்வொரு உறுப்பினரும் பொதுக் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்ட மாதாந்த உறுப்பாண்மைக் கட்டணமொன்றை செலுத்துவதற்கு ஆளாவார்.

(4) நிறைவேற்றுப்பேரவை, உறுப்பாண்மைவழங்குவதைநிராகரிக்கலாம். நிறைவேற்றுப்பேரவையின் முடிபொன்றுடன் அதிருப்தியடைகின்றவரான எவரேனும் உறுப்பினரொருவர், திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(5) நிறைவேற்றுப் பேரவையின் செயலாளர், உறுப்பினர்களுக்கான இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

8. (1) உறுப்பாண்மை பின்வருவன காரணமாக இல்லாதொழிதல் வேண்டும் :-

(i) உறுப்பாண்மைக் கட்டணங்கள் செலுத்தாமை;
(ii) அறிவித்தலின்றி ஒழுங்கமைப்பின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகை தராமை;
(iii) ஒழுங்கமைப்பின் அதிகார இடப்பரப்பை விட்டுச் செல்லல்;
(iv) உறுப்பாண்மையை வைத்திருக்க உடல் மற்றும் உளரீதியான தகுதியின்மை;
(v) குழுவேலையில் முனைப்பற்ற பங்குபற்றுகை;
(vi) நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட மறியற் தண்டனையின் தண்டனைக்கு உட்பட்டிருத்தல்;
(vii) தன்னிச்சையான பதவி விலகுகை அல்லது மரணம்;

(2) எவரேனும் உறுப்பினர் உறுப்பாண்மையை வைக்காது ஒழியுமிடத்து, உறுப்பாண்மை அவரது அடுத்துறுநருக்கு வழங்கப்படலாம்.

**அத்தியாயம் 03**

*நிறைவேற்றுப் பேரவை*

9. (1) நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினர்கள் பொதுக்கூட்டமொன்றிற்கு சமுகமளித்து வாக்களித்த உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்வருவனவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(i) தவிசாளர்;
(ii) துணைத்தவிசாளர்;
(iii) செயலாளர்;
(iv) உதவிச் செயலாளர்;
(v) பொருளாளர்; அத்துடன்
(vi) ஏனைய உறுப்பினர்கள் ஆறு உறுப்பினர்களுக்கு குறையாததும் பதினைந்து உறுப்பினர்களுக்கு மேற்படாததுமான உறுப்பினர்களின் எண்ணிக்கையினைக் குறித்துரைத்தல்.

(2) நிறைவேற்றுச்சபை குறைந்தபட்சம் மாதம் இருமுறை கூடுதல் வேண்டும்.

(3) நிறைவேற்றுப் பேரவையின் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண், மூன்று உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும். செயலாளரானவர், நிறைவேற்றுப் பேரவையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் கோரிக்கையின்பேரில் எந்நேரத்திலும் நிறைவேற்றுப் பேரவைக் கூட்டமொன்றிற்கு அழைக்கலாம்.

(4) தவிசாளர்,நிறைவேற்றுப் பேரவையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர் வருகைதராதவிடத்து, துணைத் தவிசாளர் தவிசாளராகச் செயற்படுவார். இருவரும் வருகை தராதவிடத்து உறுப்பினர்கள், கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கு செயலாளர், உதவிச் செயலாளர் அல்லது பொருளாளர் ஆகியோருக்கிடையிலிருந்து ஆளொருவரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(5) குடும்பம் ஒன்றுக்கு ஆளொருவர் மட்டும் நிறைவேற்றுப் பேரவையை பிரதிநிதித்துவப்படுத்துதல் வேண்டும்.

(6) அறிவித்தலின்றி நிறைவேற்றுப் பேரவையின் ஏதேனும் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகை தராமையானது உறுப்பினரொருவரை நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினரொருவராக இருப்பதிலிருந்து தகுதியற்றவராக்குதல் வேண்டும்.

(7) உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர், உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் அதே நேரம் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். உள்ளகக் கணக்காய்வாளர், நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினரொருவராகவிருத்தல் ஆகாது.

(8) நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினர்கள், உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் முதல் பொதுக்கூட்டத்தில் ஒரு வருட காலப்பகுதியொன்றிற்கு தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.(இதனகத்துப்பின்னர் "திணைக்களம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமானது, புதியதொரு நிறைவேற்றுப் பேரவை அல்லது நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினரொருவர் தேர்ந்தெடுக்கப்படும் போதெல்லாம் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(9) நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிகின்ற எவரேனும் ஆளொருவர் மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராவார்.

(10) நிறைவேற்றுப் பேரவையின் ஒவ்வொரு வாக்குச் சீட்டும்,உறுப்பினர்களின் திறந்த வாக்குகளை எடுப்பதன் மூலம் நடாத்தப்படுதல் வேண்டும்.

(11) நிறைவேற்றுப்பேரவையானது, அவர்கள் அது தோதானது எனக் கருதுகின்றவிடத்து இரகசிய வாக்குச்சீட்டொன்றை நடாத்தலாம்.

10. **நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினர்களின் தத்துவங்களும் பணிகளும்.**

(1) தவிசாளரின் தத்துவங்கள் மற்றும் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(i) ஒழுங்கமைப்பின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை வகித்தல் வேண்டும். தவிசாளர் வருகைதராதவிடத்து, துணைத் தவிசாளர் கூட்டத்திற்கு தலைமை தாங்குதல் வேண்டும் என்பதுடன் இருவரும் வருகைதராதவிடத்து உறுப்பினர்கள், கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கு கூட்டமொன்றில் வேறொரு உறுப்பினரை தேர்ந்தெடுத்தல் வேண்டும்;

(ii) எல்லாக் கூட்டங்களினதும் ஒவ்வொரு கூட்ட அறிக்கைகளையும் ஏனைய அறிக்கைகளையும் உறுதிப்படுத்தல்;

(iii) ஒழுங்கமைப்பின் எல்லா உத்தியோகபூர்வ பணிகள் தொடர்பில் தொடர்பாடல்களைப் பெறல்;

(iv) ஒழுங்கமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தல்;

(v) ஒழுங்கமைப்பின் ஒவ்வொரு கூட்டத்தையும் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப நடாத்துதல்;

(vi) அமைப்பின் குறிக்கோள்களின் முறையான செயற்திறனை உறுதிப்படுத்துதல்;

(vii) ஒழுங்கமைப்பின் அபிவிருத்தி மற்றும் நிதி மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் செயற்பாடுகள் தொடர்பில் தலைமைத்துவத்தை வழங்குதல்;

(viii) உறுப்பினர்கள் மற்றும் ஒழுங்கமைப்பின் உறுப்பினர்களின் அணிதிரள்தலுக்கிடையில் சுமுகமான உறவினை அதிகரித்தல்;

(ix) பொருளாளரின் உதவியுடன் இயைபான சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியில் பேணப்பட்ட கணக்கை இயக்குதல்;

(2) செயலாளரின் தத்துவங்கள் மற்றும் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(i) பொதுக்கூட்டங்கள் மற்றும் நிறைவேற்றுக்குழுக்கூட்டங்களின் அறிவித்தல்களை உரிய தேதியில் அனுப்புதல்;

(ii) பதிவேடுகள் மற்றும் கோப்புகளை பாதுகாப்பாக வைத்தல்;

(iii) ஒழுங்கமைப்பின் முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் கூட்டங்களின் கூட்ட அறிக்கைகளை திணைக்களத் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப திணைக்களத்திற்கு அனுப்புதல்;

(iv) ஒவ்வொரு கூட்டத்தினதும் கூட்டஅறிக்கைகளை தயார் செய்தல்;

(v) ஒழுங்கமைப்புக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட எல்லா ஆவணங்களையும் ஒப்புக்கொள்ளுதலும் அவற்றை நிறைவேற்றுப் பேரவைக்கு ஆற்றுப்படுத்தலும்;

(vi) ஒழுங்கமைப்பினால் அனுப்பப்படவேண்டிய எழுத்திலாலான எல்லா தொடர்பாடல்கள் அல்லது மின்னஞ்சல் செய்திகளையும் அனுப்புதல்;

(vii) உறுப்பினர்களுக்கான இடாப்பொன்றைப் பேணுதல்;

(viii) தவிசாளரின் பணிப்புக்களுக்கு அமைய ஒழுங்கமைப்பின் அமைப்பைத் தயார் செய்து பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்தல்;

(ix) ஒழுங்கமைப்பின் உத்தியோகபூர்வ இலச்சினையை அது தவறாகப் பயன்படுத்தப்படுவதிலிருந்து தடுப்பதற்கு பாதுகாத்தல்;

(3) பொருளாளரின் தத்துவங்கள் மற்றும் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(i) உறுப்பாண்மைக் கட்டணங்களை சேகரித்தல்;

(ii) திணைக்களக் கட்டளைகளுக்கு ஏற்ப கையிருப்பில் உள்ள பணத்தைப் பேணுதல்;

(iii) கையிருப்பில் வைத்திருக்க அதிகாரமளிக்கப்பட்ட அளவைத் தாண்டும் எல்லா பணங்களையும் இயைபான சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியில் வைப்பிலிடல்;

(iv) ஒழுங்கமைப்பின் வரவுசெலவுத்திட்டத்தை தயாரித்தல்;

(v) நிதி ஊக்குவிப்புக்கு நடவடிக்கை எடுத்தல்;

(vi) ஒழுங்கமைப்பின் நிதி மற்றும் பொருள் மூலவளங்களை முகாமை செய்தலும் பேணுதல்;

(vii) ஒழுங்கமைப்பின் பொருள் மூலங்களுக்கு பொருட் பதிவேடொன்றைப் பேணல்;

(viii) ஒழுங்கமைப்பின் நிதி மற்றும் பொருள் மூலங்களைக் கணக்காய்வு செய்வதில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உதவுதல்;

(ix) நிதிப்பிரிவின் எல்லா அறிக்கைகள் மற்றும் ஆவணங்களுக்கு தவிசாளரின் கையொப்பத்தைப் பெறலும் அவரது கையொப்பத்தை இடுவதன் மூலம் உறுதிப்படுத்தல்;

(x) இயைபான சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியில் பேணப்படும் கணக்கை இயக்குவதில் தவிசாளருக்கு உதவுதல்;

(xi) ஒழுங்கமைப்பின் கணக்குகளை பேணுவதுடன் கணக்குப் புத்தகங்களை வைத்திருத்தல்;

(xii) எல்லாக் கணக்குப் புத்தகங்களையும், ஒழுங்கமைப்பின் நிதி தொடர்பிலான எல்லா ஆவணங்களையும் பாதுகாத்தல்.

## அத்தியாயம் 04

*கூட்டங்கள்*

*11.* **வருடாந்தப் பொதுக்கூட்டம்**

செயலாளர், நிறைவேற்றுப் பேரவையின் பணிப்புக்களின்கீழ் ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டின் முதல் காலாண்டில் வருடாந்தப் பொதுக்கூட்டத்தை நடாத்துதல் வேண்டும் என்பதுடன் பின்வரும் அலுவல் ஒவ்வொரு வருடாந்தப் பொதுக்கூட்டத்திலும் நடாத்தப்படுதல் வேண்டும்:-

(அ) புதிய பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல்;
(ஆ) முன்னைய ஆண்டின் கணக்குகளுக்காக உறுப்பாண்மையிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல்;
(இ) முன்னைய ஆண்டின் முன்னேற்ற பரிசீலனை அறிக்கையை கருத்திற்கொள்ளல்;

*12.* **விசேட பொதுக்கூட்டம்**

(1) செயலாளர், பொதுக்கூட்டமொன்றை நடாத்துமாறு நான்கிலொன்றிற்குக் குறையாத உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் எழுத்திலாலான கோரிக்கையொன்று செயலாளருக்கு செய்யப்படும்போது விசேட பொதுக்கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

(2) விசேட பொதுக் கூட்டமொன்று, நிறைவேற்றுப் பேரவையானது விசேட பொதுக்கூட்டமொன்றைக் கூட்டுவது அவசியம் என முடிவு செய்யும் போதெல்லாம் கூட்டப்படலாம்.

*13.* **மாதாந்த பொதுக்கூட்டம்**

(1) ஒழுங்கமைப்பின் உறுப்பினர்கள் ஒவ்வொரு மாதத்திலும் ஒருமுறை பொதுக்கூட்டமொன்றை நடாத்துதல் வேண்டும் என்பதுடன் முறையான சமுதாய அடிப்படையிலான வங்கியில் இருந்து கடன்கள் பெறுவதற்கு உறுப்பினர்களால் ஆக்கப்பட்ட விண்ணப்பங்களை கவனத்திற் கொள்ளல் மற்றும் விதப்புரை,சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியிலிருந்து உறுப்பினர்களால் பெறப்பட்ட கடன்களை கண்காணித்தல் மற்றும் சொல்லப்பட்ட கண்காணிப்பு அறிக்கைகளை கவனத்திற்கொள்ளல், குறிப்பாக இந்தக் கூட்டத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(2) அடுத்துவரும் ஆண்டுக்கான செயற்றிட்டம், வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு பின்னர் நடைபெறும் முதலாவது மாதாந்த பொதுக்கூட்டத்தில் தயார் செய்யப்பட்டு நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(3) பொருளாளர் அல்லது அவரது பிரதிநிதி, மாதாந்த வருமான மற்றும் செலவு அறிக்கையொன்றை ஒவ்வொரு மாதாந்த பொதுக்கூட்டத்தில் இடுதல் வேண்டும் என்பதுடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அதனுடைய கவனத்திற் கொள்ளுதலுக்காகவும், சுழலும் நிதிக்காக கணிசமானதொரு பணமீதியை வைத்ததன் பிறது சமுதாய அடிப்படையிலான வங்கியில் பேணப்பட்ட கணக்கில் மீதியை வைப்பிலிடவும் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

*14.* **அறிவித்தல்கள்**

(1) செயலாளர், கூட்டங்களுக்கான அறிவித்தல்களை, முறையான கூட்டத்திற்கு சமுகமளிக்கத் தகவுடையவராகவுள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் அக் கூட்டத்திற்கு 14 நாட்களுக்குமுன்னர் தோதானமுறையில் வழங்குவார்.

ஆயின், விசேட பொதுக் கூட்டமொன்றிற்கான அறிவித்தலொன்று குறைந்தது 5 வேலை நாட்களுக்கு முன்னர் அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அவசர தேவைப்பாட்டின் காரணமாக கூட்டம் ஒன்று நடைபெறுகின்ற சந்தர்ப்பத்தில், முறையான அறிவித்தல், முறையான உறுப்பினரால் கடைசியாக வழங்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவல் சேவைமூலம் அல்லது உறுப்பினரால் ஏதேனும் மின்னஞ்சல் முகவரி வழங்கப்பட்டிருப்பின், அதற்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்புவதன்மூலம் அனுப்பப்படலாம்.

**அத்தியாயம் 05**

*15.* **நிதிசார் விடயங்கள்**

ஒழுங்கமைப்பின் நிதிகள்-

(1) ஒழுங்கமைப்பு, அதன் சொந்த நிதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய நிதியத்திற்கு பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும்;

(அ) உறுப்பாண்மைக் கட்டணங்கள்;

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட நன்கொடைகள்;

(இ) தொழிற்படுகின்ற கருத்திட்டங்கள் மற்றும் திணைக்களத்தின் பணிப்புரைகளுக்குகிணங்க ஒழுங்கமைப்பினால் நடைமுறைப்படுத்தப்படும் ஒப்பந்தங்கள் ஊடாக ஈட்டிய வருமானம்;

(ஈ) திணைக்கள மானியங்கள்;

(உ) கடன் வட்டி;

(ஊ) ஒழுங்கமைப்பினால் வைத்திருக்கப்பட்ட அல்லது இவ்வமைப்பு நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முன்னர் உடனடுத்து ஒழுங்கமைப்பின் பெயரில் ஏதேனும் வங்கியில் வைப்புச்செய்யப்பட்ட நிதிகள்;

(3) இச்சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பின் எல்லா நிதிகளும் இயைபான சமுதாய அடிப்படையிலான வங்கியில் உள்ள ஒரு கணக்கில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

(4) ஒழுங்கமைப்பின் நிதிகள், குழுரீதியான கொள்ளளவு அல்லது உடனடி கடன் திட்டங்கள் போன்ற வெவ்வேறு முறைமையியல்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் உறுப்பினர்களின் நிதிசார் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்படலாம்.

(5) நிறைவேற்றுப் பேரவை, காலத்துக்குக்காலம் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றிற்கமைய மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட முறைமையியல்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைமுறைகளையும், விதிகளையும் தீர்மானிக்கலாம்.

(6) ஒழுங்கமைப்பின் நிதிகள், ஒழுங்கமைப்பின் குறிக்கோள்களை அடைவதற்காக மட்டும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(7) ஒழுங்கமைப்பின் நிதிகள் பின்வருமாறு பயன்படுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) நிறைவேற்றுப் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்டதும் பொதுக்கூட்டமொன்றில் ஏற்றுக்கொள்ளப் பட்டதுமான ஒழுங்கமைப்பின் அதிகார இடப்பரப்பின் ஒழுங்கமைப்பின் உறுப்பினர்களின் நலன் பேணல் செயற்பாடுகளுக்கும்;

(ஆ) உறுப்பினர்களின் அறிவு மற்றும் திறன்களின் அபிவிருத்திக்காக அவசியமான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காகவும்;

(இ) ஒழுங்கமைப்பின் பிரதான அலுவலகத்தைப் பேணுவதற்காகவும்;

(ஈ) ஒழுங்கமைப்புக்கு அவசியமான சாதனம் மற்றும் காகிதாதியைக் கொள்வனவு செய்யவும்;

(உ) நிறைவேற்றுப் பேரவையினால் ஒழுங்கமைப்புக்கு அவசியமானவாறான அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சட்டமுறையான இனம் அல்லது சேவையை கொள்வனவு செய்யவும்;

(ஊ) சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பு, பின்வரும் வகுதிகளின்கீழ் நிதிசார் தேவைப்பாடுகளுக்கான இடர் கடன்களை உறுப்பினர்களுக்கு வழங்கலாம்;-

(i) உறுப்பினர் அல்லது எவரேனும் குடும்ப உறுப்பினரின் சுகவீனம்;

(ii) உறுப்பினர் அல்லது எவரேனும் குடும்ப உறுப்பினரின் மரணம்;

(iii) இயற்கை அனர்த்தம் காரணமாக வீடுகள் அல்லது சொத்துக்கான சேதங்கள்;

(iv) உறுப்பினர் அல்லது குடும்ப உறுப்பினரின் தற்காலிக இயலாமை;

(v) நிறைவேற்றுப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வேறு ஒத்த சூழ்நிலை.

(8) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி வங்கித்தொழிற் சங்கங்களின் முகாமைச் சபையின் பணிப்புக்களுக்கமைய ஏதேனும் இடர்கடன் வழங்கப்படுகிறதோ அந்த நியதிகளும் நிபந்தனைகளும் நிறைவேற்றுப் பேரவையினால் வகுத்தமைக்கப்படுதல் வேண்டும்.

[ஒழுங்குவிதி - 4(1)(ஆ)]

**அட்டவணை 'ஆ'**

*சமுர்த்தி பிராந்திய ஒழுங்கமைப்பின் அமைப்பு மற்றும் நிருவாகக் கட்டமைப்பு*

*முன்னுரை*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் சட்டமாக்கப்பட்ட 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க,சமுர்த்தி சட்டத்திற்கிணங்க, பொருளாதார அபிவிருத்தித் செயல்முறையின் ஊக்குவிப்புக்காகவும், தனிநபர், குடும்பம்,குழு மற்றும் சமுதாயம் இச்சட்டத்தின் முன்னுரிமைகளாகவும், வறுமையை ஒழிப்பதற்கும் சமூக நீதியை உறுதிப்படுத்துவதற்குமான தேசிய கொள்கையை வலுவூட்டும் பாரிய குறிக்கோளை உயிர்ப்பூட்டுவதற்கு வலய, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலான ஒருங்கிணைப்பு வலையமைப்பில் ஆரம்ப அலகாகவும்,இச்சமுர்த்தி பிராந்திய ஒழுங்கமைப்புகள் தேசிய தேவைப்பாட்டை நிறைவேற்றும் பொறுப்பைத் தாங்கும். முக்கியமானதும், விரிவானதுமானஆரம்பத்திற்கு தாபிக்கப்பட்ட எல்லாப் பணிகளையும் திறந்த மற்றும் வெளிப்படையான முறையில் நிறைவேற்றவும், சட்டத்தின் நீதியையும் சட்டத்தின் சமமான உதவியை எல்லா உறுப்பினர்களுக்கும் வகை செய்வதற்கும், பணியாட்தொகுதியினர் மற்றும் உறுப்பினர்கள் எப்பொழுதும் நல்லெண்ணத்துடன் செயற்படுகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்தவும், சமுதாயமானது, கட்சி அரசியலின்மேல் பிரிந்து விடாது அதன்மூலம் தேசிய ஒற்றுமையை உறுதிப்படுத்தும் சமுதாயத்தை, நல்லிணக்கத்தினூடாக இணைப்பதற்கும், பெறுமானங்கள் அழிவுறுவதைத் தடுக்கவும், கிடைக்கப்பெறும் வளங்களையும் சேவைகளையும் நியாயமாக அணுகுவதற்கு ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்காகவும் ஒழுக்கநெறியைக் கட்டியெழுப்பவும், சிக்கனம், சட்டத்தை மதித்தல், மரியாதை,சூழல்நட்பு, தன்னம்பிக்கை, புத்தாக்கம் மற்றும் கூட்டுப் பொறுப்புப் பழக்கங்களின் அபிவிருத்திக்காகவும், தேசிய, மத மற்றும் அரசியல் பிரிவுகளைப் பொருட்படுத்தாது அதிகார இடப்பரப்பின் ஒழுங்கமைப்பின் இச்சட்டத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு ஒழுங்கமைப்பு தாபிக்கப்படுகின்றது என உறுதிப்படுத்துகிறோம்.

**அத்தியாயம் 01**

*அடிப்படை விடயங்கள்*

1. பெயர் : (இடப்பரப்பின் பெயர்) ..............................................சமுர்த்திபிராந்திய ஒழுங்கமைப்பு.

2. அதிகார இடப்பரப்பு :- (இதனகத்துப்பின்னர் "அதிகார இடப்பரப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ....................................... மாகாணத்தின் ....................... நிருவாக மாவட்டத்தில் ............................... பிரதேச செயலாளர்கள் பிரிவில் ............................................ (உள்ளூரதிகாரசபை) அதிகார இடப்பரப்பினுள் .......................... அதிகார இடப்பரப்பினுள்..........................................சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிச் சமாசத்தின் (கிராம அலுவலர் பிரிவு) இன் ............................................................ (கிராமம்) சமுர்த்தி பிராந்திய ஒழுங்கமைப்பு.

3. முகவரி :...........................................................................

4. தொலை நோக்கு : "வலுவூட்டப்பட்ட சுபீட்சமான ஒரு சமுதாயம்"

5. பணி : முகாமை மற்றும் தொடர்பாடல் திறன், வறுமையை ஒழித்தல் மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார அபிவிருத்தி மற்றும் சமூக வலுவூட்டலால் பூர்த்தி செய்யப்பட்ட வாழ்வாதார செயற்பாடுகளை மேம்படுத்துதல் மூலம் சமுதாய அடிப்படையிலான அதிகார இடப்பரப்பின் சமுதாயத்தின் மத்தியில் மேம்பட்ட மனப்பாங்குசார் அபிவிருத்தியை தாபிப்பதுடன் ஒவ்வொரு அம்சத்திலும் சமுதாயத்தினை வலுவூட்டுவதன் மூலம் தேசிய அபிவிருத்தித் தொழிற்பாட்டிற்கு பங்களிப்புச் செய்தல்.

6. குறிக்கோள்கள், தத்துவங்கள் மற்றும் பணிகள் : (இதனகத்துப் பின்னர் "ஒழுங்கமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ........................................ சமுர்த்தி பிராந்திய ஒழுங்கமைப்பு,2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின் பிரிவு 10 இல் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை எய்தும் பொருட்டு முறையே அச்சட்டத்தின் பிரிவு 11 மற்றும் 12இல் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்கள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் இத்தால் பொறுப்பேற்கிறது.

## அத்தியாயம் 02

*உறுப்பாண்மை*

7. ஒழுங்கமைப்பின் உறுப்பினர்கள் பின்வருவோராதல் வேண்டும் -

(அ) அதிகார இடப்பிரதேசத்தினுள் தொழிற்படுகின்ற அனைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் தவிசாளர்கள்;

(ஆ) பிராந்தியத்திற்கு பொறுப்பாகவுள்ள திணைக்கள அலுவலரின் அலுவலர்;

(இ) சமுர்த்தி சட்டத்தின் 29ஆம் பிரிவின்கீழ் அதிகார இடப்பிரதேசத்தினுள் தாபிக்கப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற் சங்கங்களின் சிரேட்ட முகாமையாளர்கள்; அத்துடன்

(ஈ) பிராந்தியத்தில் அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மூன்று ஆட்கள்.

8. உறுப்பாண்மை பின்வருவன காரணமாக இல்லாதொழிதல் வேண்டும் :-

(i) அறிவித்தலின்றி ஒழுங்கமைப்பின் தொடர்ச்சியாக மூன்று(3) கூட்டங்களுக்கு வருகை தராமை;

(ii) ஒழுங்கமைப்பின் அதிகார இடப்பரப்பை விட்டுச் செல்லல்;

(iii) உறுப்பாண்மையை வைத்திருக்க உடல் மற்றும் உளரீதியான தகுதியின்மை;

(iv) குழுவேலையில் முனைப்பற்ற பங்குபற்றுகை;

(v) நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட மறியற் தண்டனையின் தண்டனைக்கு உட்பட்டிருத்தல்;

(vi) தன்னிச்சையான பதவி விலகுகை அல்லது மரணம்;

## அத்தியாயம் 03

*நிறைவேற்றுப் பேரவை*

9. (1) நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினர்கள் பொதுக்கூட்டமொன்றிற்கு சமுகமளித்து வாக்களித்த உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்வருனவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) தவிசாளர்;

(ii) துணைத்தவிசாளர்;

(iii) செயலாளர்;

(iv) உதவிச் செயலாளர்;

(v) பொருளாளர்; அத்துடன்

(vi) ஏனைய.......................... உறுப்பினர்கள்(ஆறு உறுப்பினர்களுக்கு குறையாததும் பதினைந்து உறுப்பினர்களுக்கு மேற்படாததுமான உறுப்பினர்களின் எண்ணிக்கையினைக் குறித்துரைத்தல்.)

(2) நிறைவேற்றுச்சபை குறைந்தபட்சம் மாதம் இருமுறை கூடுதல் வேண்டும்.

(3) நிறைவேற்றுப் பேரவையின் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண், மூன்று உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும். செயலாளரானவர், நிறைவேற்றுப் பேரவையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் கோரிக்கையின்பேரில் எந்நேரத்திலும் நிறைவேற்றுப் பேரவைக் கூட்டமொன்றிற்கு அழைக்கலாம்.

(4) தவிசாளர்,நிறைவேற்றுப் பேரவையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர் வருகைதராதவிடத்து, துணைத் தவிசாளர் தவிசாளராகச் செயற்படுவார். இருவரும் வருகை தராதவிடத்து உறுப்பினர்கள், கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கு செயலாளர், உதவிச் செயலாளர் அல்லது பொருளாளர் ஆகியோருக்கிடையிலிருந்து ஆளொருவரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(5) குடும்பம் ஒன்றுக்கு ஆளொருவர் மட்டும் நிறைவேற்றுப் பேரவையை பிரதிநிதித்துவப்படுத்துதல் வேண்டும்.

(6) அறிவித்தலின்றி நிறைவேற்றுப் பேரவையின் ஏதேனும் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகை தராமையானது உறுப்பினரொருவரை நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினரொருவராக இருப்பதிலிருந்து தகுதியற்றவராக்குதல் வேண்டும்.

(7) உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர், உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் அதே நேரம் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். உள்ளகக் கணக்காய்வாளர், நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினரொருவராகவிருத்தல் ஆகாது.

(8) நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினர்கள், உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் முதல் பொதுக்கூட்டத்தில் ஒரு வருட காலப்பகுதியொன்றிற்கு தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.(இதனகத்துப்பின்னர் "திணைக்களம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமானது, புதியதொரு நிறைவேற்றுப் பேரவை அல்லது நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினரொருவர் தேர்ந்தெடுக்கப்படும் போதெல்லாம் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(9) நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிகின்ற எவரேனும் ஆளொருவர் மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராவார்.

(10) நிறைவேற்றுப் பேரவையின் ஒவ்வொரு வாக்கெடுப்பும், உறுப்பினர்களின் திறந்த வாக்குகளை எடுப்பதன் மூலம் நடாத்தப்படுதல் வேண்டும்.

(11) நிறைவேற்றுப் பேரவையானது, அவர்கள் அது தோதானது எனக் கருதுகின்றவிடத்து இரகசிய வாக்கெடுப்பொன்றை நடாத்தலாம்.

10. **நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினர்களின் தத்துவங்களும் பணிகளும்.**

(1) தவிசாளரின் தத்துவங்கள் மற்றும் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(i) ஒழுங்கமைப்பின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை வகித்தல் வேண்டும். தவிசாளர் வருகைதராதவிடத்து, துணைத் தவிசாளர் கூட்டத்திற்கு தலைமை தாங்குதல் வேண்டும் என்பதுடன் இருவரும் வருகைதராதவிடத்து உறுப்பினர்கள், கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கு கூட்டமொன்றில் வேறொரு உறுப்பினரை தேர்ந்தெடுத்தல் வேண்டும்;

(ii) எல்லாக் கூட்டங்களினதும் ஒவ்வொரு கூட்ட அறிக்கைகளையும் ஏனைய அறிக்கைகளையும் உறுதிப்படுத்தல்;

(iii) ஒழுங்கமைப்பின் எல்லா உத்தியோகபூர்வ பணிகள் தொடர்பில் தொடர்பாடல்களைப் பெறல்;

(iv) ஒழுங்கமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தல்;

(v) ஒழுங்கமைப்பின் ஒவ்வொரு கூட்டத்தையும் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப நடாத்துதல்;

(vi) அமைப்பின் குறிக்கோள்களின் முறையான செயற்திறனை உறுதிப்படுத்துதல்;

(vii) ஒழுங்கமைப்பின் அபிவிருத்தி மற்றும் நிதி மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் செயற்பாடுகள் தொடர்பில் தலைமைத்துவத்தை வழங்குதல்;

(viii) உறுப்பினர்கள் மற்றும் ஒழுங்கமைப்பின் உறுப்பினர்களின் அணிதிரள்தலுக்கிடையில் சுமுகமான உறவினை அதிகரித்தல்;

(ix) பொருளாளரின் உதவியுடன் இயைபான சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியில் பேணப்பட்ட கணக்கை இயக்குதல்.

(2) செயலாளரின் தத்துவங்கள் மற்றும் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(i) பொதுக்கூட்டங்கள் மற்றும் நிறைவேற்றுக் குழுக்கூட்டங்களின் அறிவித்தல்களை உரிய தேதியில் அனுப்புதல்;

(ii) பதிவேடுகள் மற்றும் கோப்புகளை பாதுகாப்பாக வைத்தல்;

(iii) ஒழுங்கமைப்பின் முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் கூட்டங்களின் கூட்ட அறிக்கைகளை திணைக்களத் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப திணைக்களத்திற்கு அனுப்புதல்;

(iv) ஒவ்வொரு கூட்டத்தினதும் கூட்டஅறிக்கைகளை தயார் செய்தல்;

(v) ஒழுங்கமைப்புக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட எல்லா ஆவணங்களையும் ஒப்புக்கொள்ளுதலும் அவற்றை நிறைவேற்றுப் பேரவைக்கு ஆற்றுப்படுத்தலும்;

(vi) ஒழுங்கமைப்பினால் அனுப்பப்படவேண்டிய எழுத்திலாலான எல்லா தொடர்பாடல்கள் அல்லது மின்னஞ்சல் செய்திகளை அனுப்புதல்;

(vii) உறுப்பினர்களுக்கான இடாப்பொன்றைப் பேணுதல்;

(viii) தவிசாளரின் பணிப்புக்களுக்கு அமைய ஒழுங்கமைப்பின் அமைப்பைத் தயார் செய்து பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்தல்;

(ix) ஒழுங்கமைப்பின் உத்தியோகபூர்வ இலச்சினையை அது தவறாகப் பயன்படுத்தப்படுவதிலிருந்து தடுப்பதற்கு பாதுகாத்தல்.

(3) பொருளாளரின் தத்துவங்கள் மற்றும் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(i) உறுப்பாண்மைக் கட்டணங்களைச் சேகரித்தல்;

(ii) திணைக்களக் கட்டளைகளுக்கு ஏற்ப கையிருப்பில் உள்ள பணத்தைப் பேணுதல்;

(iii) கையிருப்பில் வைத்திருக்க அதிகாரமளிக்கப்பட்ட அளவைத் தாண்டும் எல்லாப் பணங்களையும் இயைபான சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியில் வைப்பிலிடல்;

(iv) ஒழுங்கமைப்பின் வரவுசெலவுத்திட்டத்தை தயாரித்தல்;

(v) நிதி ஊக்குவிப்புக்கு நடவடிக்கை எடுத்தல்;

(vi) ஒழுங்கமைப்பின் நிதி மற்றும் பொருள் மூலவளங்களை முகாமை செய்தலும் பேணுதல்;

(vii) ஒழுங்கமைப்பின் பொருள் மூலமூலங்களுக்கு பொருட் பதிவேடொன்றைப் பேணல்;

(viii) ஒழுங்கமைப்பின் நிதி மற்றும் பொருள் மூலங்களைக் கணக்காய்வு செய்வதில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உதவுதல்;

(ix) நிதிப்பிரிவின் எல்லா அறிக்கைகள் மற்றும் ஆவணங்களுக்கு தவிசாளரின் கையொப்பத்தைப் பெறலும் அவரது கையொப்பத்தை இடுவதின் மூலம் உறுதிப்படுத்தல்;

(x) இயைபான சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியில் பேணப்படும் கணக்கை தொழிற்படுத்துவதில் தவிசாளருக்கு உதவுதல்;

(xi) ஒழுங்கமைப்பின் கணக்குகளை பேணுவதுடன் கணக்குப் புத்தகங்களை வைத்திருத்தல்;

(xii) எல்லாக் கணக்குப் புத்தகங்களையும், ஒழுங்கமைப்பின் நிதி தொடர்பிலான எல்லா ஆவணங்களையும் பாதுகாத்தல்.

## அத்தியாயம் 04

*கூட்டங்கள்*

**11. வருடாந்தப் பொதுக்கூட்டம்**

செயலாளர், நிறைவேற்றுப் பேரவையின் பணிப்புக்களின்கீழ் ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டின் முதல் காலாண்டில் வருடாந்தப் பொதுக்கூட்டத்தை நடாத்துதல் வேண்டும் என்பதுடன் பின்வரும் அலுவல் ஒவ்வொரு வருடாந்த பொதுக்கூட்டத்திலும் நடாத்தப்படுதல் வேண்டும்:-

(அ) புதிய பதவி தாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தலும்;
(ஆ) முன்னைய ஆண்டின் கணக்குகளுக்காக உறுப்பாண்மையிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல்;
(இ) முன்னைய ஆண்டின் முன்னேற்ற பரிசீலனை அறிக்கையை கருத்திற்கொள்ளல்.

**12. விசேட பொதுக்கூட்டம்**

(1) செயலாளர், பொதுக்கூட்டமொன்றை நடாத்துமாறு நான்கிலொன்றிற்குக் குறையாத உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் எழுத்திலாலான கோரிக்கையொன்று செயலாளருக்கு செய்யப்படும்போது விசேட பொதுக்கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

(2) விசேட பொதுக் கூட்டமொன்று, நிறைவேற்றுப் பேரவையானது விசேட பொதுக்கூட்டமொன்றைக் கூட்டுவது அவசியம் என முடிவு செய்யும் போதெல்லாம் கூட்டப்படலாம்.

**13. மாதாந்தப் பொதுக்கூட்டம்**

(1) ஒழுங்கமைப்பின் உறுப்பினர்கள் ஒவ்வொரு மாதத்திலும் ஒருமுறை பொதுக்கூட்டமொன்றை நடாத்துதல் வேண்டும் என்பதுடன் முறையான சமுதாய அடிப்படையிலான வங்கியில் இருந்து கடன்கள் பெறுவதற்கு உறுப்பினர்களால் ஆக்கப்பட்ட விண்ணப்பங்களை கவனத்திற் கொள்ளல் மற்றும் விதப்புரை,சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியிலிருந்து உறுப்பினர்களால் பெறப்பட்ட கடன்களை கண்காணித்தல் மற்றும் சொல்லப்பட்ட கண்காணிப்பு அறிக்கைகளை கவனத்திற்கொள்ளல், குறிப்பாக இந்தக் கூட்டத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(2) அடுத்துவரும் ஆண்டுக்கான செயற்றிட்டம், வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு பின்னர் நடைபெறும் முதலாவது மாதாந்த பொதுக்கூட்டத்தில் தயார் செய்யப்பட்டு நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(3) பொருளாளர் அல்லது அவரது பிரதிநிதி, மாதாந்த வருமான மற்றும் செலவு அறிக்கையொன்றை ஒவ்வொரு மாதாந்த பொதுக்கூட்டத்தில் இடுதல் வேண்டும் என்பதுடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அதனுடைய கவனத்திற் கொள்ளுதலுக்காகவும், சுழலும் நிதிக்காக கணிசமானதொரு பணமீதியை வைத்ததன் பின்னர் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியில் பேணப்பட்ட கணக்கில் மீதியை வைப்பிலிடவும் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

**14. அறிவித்தல்கள்**

(1) செயலாளர், கூட்டங்களுக்கான அறிவித்தல்களை, முறையான கூட்டத்திற்கு சமுகமளிக்கத் தகவுடையவராகவுள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் அக் கூட்டத்திற்கு 14 நாட்களுக்கு முன்னர் தோதானமுறையில் வழங்குவார்:

ஆயின், விசேட பொதுக் கூட்டமொன்றிற்கான அறிவித்தலொன்று குறைந்தது 5 வேலை நாட்களுக்கு முன்னர் அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அவசர தேவைப்பாட்டின் காரணமாக கூட்டம் ஒன்று நடைபெறுகின்ற சந்தர்ப்பத்தில், முறையான அறிவித்தல், முறையான உறுப்பினரால் கடைசியாக வழங்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவல் சேவைமூலம் அல்லது உறுப்பினரால் ஏதேனும் மின்னஞ்சல் முகவரி வழங்கப்பட்டிருப்பின், அதற்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்புவதன்மூலம் அனுப்பப்படலாம்.

**அத்தியாயம் 05**

*நிதிசார் விடயங்கள்*

*15.* ஒழுங்கமைப்பின் நிதிகள்-

*(1)* ஒழுங்கமைப்பு, அதன் சொந்த நிதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*(2)* அத்தகைய நிதியத்திற்கு பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும்.

(அ) உறுப்பாண்மைக் கட்டணங்கள்;

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட நன்கொடைகள்;

(இ) தொழிற்படுகின்ற கருத்திட்டங்கள் மற்றும் திணைக்களத்தின் பணிப்புரைகளுக்குகிணங்க ஒழுங்கமைப்பினால் நடைமுறைப்படுத்தப்படும் ஒப்பந்தங்கள் ஊடாக ஈட்டிய வருமானம்;

(ஈ) திணைக்கள மானியங்கள்;

(உ) கடன் வட்டி;

(ஊ) ஒழுங்கமைப்பினால் வைத்திருக்கப்பட்ட அல்லது இவ்வமைப்பு நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முன்னர் உடனடுத்து ஒழுங்கமைப்பின் பெயரில் ஏதேனும் வங்கியில் வைப்புச்செய்யப்பட்ட நிதிகள்;

*(3)* பிராந்திய ஒழுங்கமைப்பின் எல்லா நிதிகளும் இயைபான சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியில் உள்ள ஒரு கணக்கில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

*(4)* ஒழுங்கமைப்பின் நிதிகள், ஒழுங்கமைப்பின் குறிக்கோள்களை எய்துவதற்கு மட்டும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

*16.* **ஒழுங்கமைப்பு நிதி மேற்பார்வை:**

(அ) அதன் அதிகார இடப்பிரதேசத்தினுள் பணியாற்றுகின்ற சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் நிதியங்களைப் பயன்படுத்தி நிறைவேற்றப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் சோதனை செய்தலும் மேற்பார்வை செய்தலும்; அத்துடன்

(ஆ) சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட சமுர்த்தி மாவட்டக்குழுவிற்கு அத்தகைய செயற்பாடுகள் தொடர்பில் பரிந்துரைகளைச் செய்தலும் அதனை சமர்ப்பித்தலும்.

அட்டவணை **'இ'**

**சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சமாசத்தின் அமைப்பு மற்றும் நிருவாகக் கட்டமைப்பு**

[ஒழுங்குவிதி - *4(1)*(இ)]

*முன்னுரை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் சட்டமாக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சமுர்த்திச் சட்டத்திற்கிணங்க, பொருளாதார அபிவிருத்தித் தொழிற்பாட்டின் ஊக்குவிப்புக்காகவும், சேவைகளை வழங்குவதில் தற்போதைய நிதிச்சந்தையினால் முன்னுரிமை வழங்கப்பட்டிராத சிறிய அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கும் கிராமிய மக்களுக்கும் முறையான கவனம் செலுத்தியும், நுண் நிதிச் சேவைகள் வழங்கும் பரந்த குறிக்கோளுக்கு முதன்மையளித்தும், வறுமையை ஒழிப்பதற்கும் சமூக நீதியை உறுதிப்படுத்துவதற்குமான தேசிய கொள்கையை வலுவூட்டும் பாரிய குறிக்கோளை*

உயிர்ப்பூட்டுவதற்கும், சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களின் கிரமமாக்குதல், ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வையை வினைத்திறனாக்கும் பொருட்டும், இவைகளுக்கு கொள்கைக் கட்டுக்கோப்பு ஒன்றை உருவாக்கும் குறிக்கோளுடனும் (இதனகத்துப்பின்னர் “சமாசம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இச்சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சமாசமானது, எல்லா சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களின் பங்குபற்றலுடன், சமுர்த்தித் திணைக்களத்தின்கீழ் தாபிக்கப்படுகின்றது.

## அத்தியாயம் 01

### அடிப்படை விடயங்கள்

1. முகவரி –

2. தொலைநோக்கு: நிலைபெறுதகு அபிவிருத்திக்கான நுண் நிதிப்பலம்

3. பணி: நேர்மறை மற்றும் சூழல் நட்பு மனப்பாங்குகள் மேம்படுத்தலுடன், சமூக வலுவூட்டலுக்காக நுண் நிதிசார் சேவைகளை சமுர்த்தி பயனுகரிகளுக்கு வினைத்திறனாகவும் விளை திறனாகவும் வழங்குவதை நோக்கி எல்லா சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களுக்கு வழிகாட்டுதல்.

4. உறுப்பாண்மை :

(1) அனைத்து பதிவுசெய்யப்பட்டசமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்கள் சமாசத்தின் உறுப்பாண்மையினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்;

(2) உறுப்பாண்மையைப் பெற்றுக்கொள்வதற்கு, ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கம்அதன் பெயரில் ஆகக்குறைந்தது ஒரு பங்கினை வாங்குதல் வேண்டுமென்பதுடன், இச்சமாசத்தின் மூலதனப்பங்கிற்கு ஒப்பப்பணம் செலுத்துதலும் வேண்டும்;

(3) பங்கொன்றின் பெயரளவிலான பெறுமதி ஐயாயிரம் ரூபாவாக (ரூபா 5,000) இருத்தல் வேண்டும்.

5. குறிக்கோள்கள் :

(அ) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகளை ஒருங்கிணைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களின் ஒப்பேறக்கூடிய வலையமைப்பொன்றை மேம்படுத்துதலும்;

(ஆ) நிதிச்சந்தையை வினைத்திறனாக இயக்குவதற்கு,சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களுக்கு தொழில்நுட்ப வழிகாட்டலை வழங்கலும்;

(இ) முறைசார் நுண் நிதிசார் வங்கித்தொழிற் செயற்பாடுகளில் ஈடுபட சமுர்த்திப் பயனுகரிகளுக்கு உந்துதல் அளித்தலும்;

(ஈ) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களை முறைப்படுத்துவதும், அவைகளின் வினைத்திறனை ஊக்குவித்தலும்;

(உ) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களுக்காக கொள்கைக் கட்டுக்கோப்பு ஒன்றை உருவாக்குவதற்கு (இதனகத்துப்பின்னர் “திணைக்களம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உதவி வழங்குதலும்; அத்துடன்

(ஊ) சமுர்த்திப் பயனுகரிகளின் முதலீட்டுப் பலத்தினூடாக உருவாக்கப்படும் தொழில்முயற்சிகளை ஊக்குவித்தலும்.

6. தத்துவங்கள் மற்றும் பணிகள் :

(அ) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களின் அலுவல்களைக் கண்காணித்தலும்;

(ஆ) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களுக்கு மீள் நிதி வசதிகளை வழங்கலும்;

(இ) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களின் பணிகளின் செயற்படுத்துகை மற்றும் குறிக்கோள்களை எய்துதல் நோக்கி வேலை செய்தலும்;

(ஈ) ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கான வழிகாட்டிநெறிகளை வழங்குதலும்;

(உ) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களுக்காக மீள்காப்புறுதியாளர் ஒருவராகச் செயற்படுதலும்;

(ஊ) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களின் பெயரில் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதலும்;

(எ) அவசியமேற்படும்போது, நாடளாவிய ரீதியில் தொழிற்படும் எல்லா சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களிடமிருந்து அறிக்கைகளைக் கோருதலும்;

(ஏ) சுற்றறிக்கைகள் மூலம்,சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்கள் தொடர்பிலான நிருவாக விடயங்களில் திணைக்களத்துக்கு உதவுதலும்; அத்துடன்

(ஐ) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சமாசத்தின் பெயரில் ஏதேனும் அரச வங்கியொன்றில், தவிசாளரினால் பேணப்பட்டு இயக்கப்படும் கணக்குகளை திறத்தலும்;

7. நிருவாகக் கட்டமைப்பு :

(1) சமாசத்தின் அலுவல்கள் முகாமை, பின்வரும் 15 உறுப்பினர்களைக் கொண்ட (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பணிப்பாளர்கள் சபையொன்றினால் புரியப்படுதல் வேண்டும்:-

(அ) (இதனகத்துப்பின்னர் "தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒன்பது மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தேர்ந்தெடு க்கப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களின் தவிசாளர்களாகவிருக்கும் ஒன்பது ஆட்கள், அவர்களுள் இருந்து சபையின் தவிசாளர் மற்றும் துணைத் தவிசாளர் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்;

(ஆ) திணைக்களத்திலிருந்து மூன்று ஆட்கள் அதாவது-

(i) திணைக்களத்தின் நுண் நிதிப் பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ள பணிப்பாளர்;

(ii) திணைக்களத்தின் நுண் நிதிப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர்; அவர் சபையின் செயலாளராகவும் இருத்தல் வேண்டும்;

(iii) (இதனகத்துப்பின்னர் "பதவி வழி பணிப்பாளர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) திணைக்களத்தின் சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புப் பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ள பணிப்பாளர்; அத்துடன்

(இ) (இதனகத்துப்பின்னர் "பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் மூன்று ஆட்கள்.

(2) சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அந்நோக்கத்துக்காக கூட்டப்பட்ட கூட்டமொன்றில் எல்லா சமுர்த்தி வங்கித்தொழிற் சங்கங்களின் தவிசாளர்களின் இணக்கப்பாட்டின் மூலம் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(3) சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பினரும், சபைக்கான அவரது நியமனத் தேதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதியொன்றிற்கு பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், சமாசத்தின் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்:

ஆயினும் எவ்வாறாயினும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் சபையின் உறுப்பாண்மைக்கு ஏதேனும் தொடர்ச்சியான இரு வருடங்களுக்கு மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலாகாது.

(4) சபையின் உறுப்பினர்களின் பெயர்களை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.

(5) சமாசத்தின் சபைக்கு, ஏதேனும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கத்திலிருந்து எவரேனும் உறுப்பினரை தெரிவுசெய்வதில் இணக்கப்பாடு இல்லாதவிடத்து, (2) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களின் உறுப்பினர் தவிசாளர்களுக்கு மத்தியில் இரகசிய வாக்கெடுப்பொன்று நடாத்தப்படுதல் வேண்டும்.

(6) ஐந்தாம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட இரகசிய வாக்கெடுப்பின் போது, தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய தவிசாளர் தவிர்ந்த சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கமொன்றின் ஒவ்வொரு உறுப்பினர், தவிசாளர் என்போர் வாக்கொன்றிற்கு உரித்துடையவராவார்.

(7) பந்திகள் (5) இல் குறிப்பீடு செய்யப்பட்ட தேர்தல்களின்போது, மாவட்டப் பணிப்பாளர் தெரிவத்தாட்சி அலுவலராக செயற்படுதல் வேண்டும்.

(8) ஏதேனும் மாகாணத்திற்கு ஒரு நிருவாக மாவட்டம் மட்டும் இருக்கின்றவிடத்து அல்லது ஒரு மாகாணத்தின் ஒரு நிருவாகத்திலிருந்து மட்டும் ஒரு பெயர் நியமனம் இருக்கின்றவிடத்து, அதே நிருவாக மாவட்டத்திலிருந்து, அதே உறுப்பினர், இரண்டு அல்லது பல தொடர்ச்சியான ஆண்டுகளுக்கு சமாசத்திற்கு தேர்ந்தெடுக்கப்படலாம்.

(9) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், பணிப்பாளர் தலைமையதிபதியின் விருப்பத்தின் பேரில் பதவிகள் வகித்தபோதும், அவர்கள், பணிப்பாளர் தலைமையதிபதிக்கு முகவரியிடப்பட்ட கடிதம் ஒன்றின்மூலம் அவர்களின் பதவியிலிருந்து விலகலாம்.

தவிசாளர் மற்றும் துணைத் தவிசாளர்.

(10) தவிசாளர் மற்றும் துணைத்தவிசாளர், (1) ஆம் பந்திக்கிணங்க தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்பது பணிப்பாளர்களுக்கு மத்தியிலிருந்து இரகசிய வாக்கெடுப்புமூலம் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(11) பணிப்பாளர் ஒவ்வொருவரும் வாக்கொன்றிற்கு உரித்துடையவராவார். பணிப்பாளர்,எவரும் தவிசாளராக அல்லது துணைத்தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட, தனது வாக்கை தனக்கு அளிப்பதற்கு உரித்துடையவராகமாட்டார். பணிப்பாளர் வாக்களிப்பதிலிருந்து தவிர்ந்திருத்தலாகாது.

(12) பந்தி 10 இல் குறிப்பீடு செய்யப்பட்ட இரகசிய வாக்கெடுப்பு செயலாளரினால் நடாத்தப்படுதல் வேண்டும். உச்ச எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்ற பணிப்பாளர், தவிசாளராக தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அடுத்த உச்ச எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்ற பணிப்பாளர் துணைத் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்படுதலும் வேண்டும்.

(13) எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு பணிப்பாளர்கள்,பந்தி 10 இல் குறிப்பீடு செய்யப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில், சம எண்ணிக்கையான வாக்குகளைப் பெறுகின்றவிடத்து, முகாமைப் பணிப்பாளர், திருவுளச்சீட்டு மூலம் தவிசாளர் மற்றும் துணைத்தவிசாளரை தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

செயலாளர்

(14) திணைக்களத்தின் நுண் நிதிப்பிரிவின் பிரதிப் பணிப்பாளர், சமாசத்தின் பதவிவழிச் செயலாளராகப் பணிபுரிதல் வேண்டும்.

8. பணிப்பாளர் ஒருவராக இருப்பதற்கான தகைமையீனம் - ஆளொருவர், பின்வருமாறு- இருக்கின்றவிடத்து சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ச்சியாக இருப்பதிலிருந்து தகைமையீனமாக்கப்படுதல் வேண்டும். அவர்;

(அ) 70 வயதை அடைகின்றவிடத்து;

(ஆ) நீதிமன்றத்தால் தவறொன்றிற்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு மறியற்தண்டனை விதிக்கப்பட்டால்;

(இ) பாராளுமன்றம் அல்லது மாகாணசபை அல்லது உள்ளூராட்சி அதிகாரசபை ஒன்றின் உறுப்பினராகவிருந்தால் அல்லது உறுப்பினரானால்;

(ஈ) குடியரசின் ஜனாதிபதியாகவிருந்தால் அல்லது ஜனாதிபதியானால்;

(உ) ஏதேனும் மாகாணத்தின் ஆளுநராகவிருந்தால் அல்லது ஆளுநராகவானால்;

(ஊ) வங்கியொன்றின் அல்லது நிதி நிறுவனமொன்றின் ஊழியராகவிருந்தால் அல்லது ஊழியரானால்; அத்துடன்

(எ) உடல்ரீதியாக மற்றும் உளரீதியாக இயலாமை.

## அத்தியாயம் 02

*கூட்டங்கள்*

9. வருடாந்த பொதுக்கூட்டம் : செயலாளர், சபையின் பணிப்புக்களின்கீழ் ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டின் முதல் காலாண்டில் உறுப்பினர்களின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தை நடாத்துதல் வேண்டும்.

பின்வரும் அலுவல் ஒவ்வொரு வருடாந்த பொதுக் கூட்டத்திலும் நடாத்தப்படுதல் வேண்டும்:-

(அ) இயைபான ஆண்டுக்கான சமாசத்தின் சபையைத் தேர்ந்தெடுத்தலும்;

(ஆ) முன்னைய ஆண்டின் முன்னேற்ற பரிசீலனை அறிக்கையை கருத்திற் கொள்ளலும்;

(இ) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழில் முறைமை தொடர்பில், முன்னைய ஆண்டின் முன்னேற்ற பரிசீலனை அறிக்கையை கருத்திற் கொள்ளலும்;

(ஈ) சமாசத்தின் குறிக்கோள்களை எய்துவதில் அடைந்த முன்னேற்றத்தை பரிசீலனை செய்தலும்;

(உ) முன்னைய ஆண்டின் கணக்குகள் பற்றிய கூற்றுக்கானஅங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளலும்.

10. விசேட பொதுக்கூட்டம் :

(1) தவிசாளர் விசேட பொதுக் கூட்டமொன்றை நடாத்துமாறு நான்கிலொன்றிற்குக் குறையாத உறுப்பினர்களால் எழுத்திலாலான கோரிக்கையொன்று செய்யப்படுமிடத்து, விசேட பொதுக் கூட்டமொன்று கூட்டப்படுவதற்கு பணித்தல் வேண்டும்.

(2) விசேட பொதுக் கூட்டமொன்று, சபையால் விசேட பொதுக்கூட்டமொன்றைக் கூட்டுவதற்கு தேவைப்பாடு ஒன்று உள்ளது என முடிவு செய்யப்படுகின்றபோது, எச்சந்தர்ப்பத்திலும் கூட்டப்படலாம்.

11. சபையின் கூட்டங்கள் :

(1) சபையின் கூட்டங்கள், முகாமைத் தேவைப்பாடுகள் காரணமாக காலத்துக்குக்காலம் அழைக்கப்படலாம் என்பதுடன் அடுத்த கூட்டத்தின் தேதி, நேரம் மற்றும் இடம் கூட்டத்தில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையின் முதல் கூட்டத்தின் தேதி, நேரம் மற்றும் இடம், முதல் வருடாந்த பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) சபை, ஆகக்குறைந்தது ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு தடவை கூடுதல் வேண்டும்.

12. கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புக்கள் :

(1) எல்லாக் கூட்டங்களினதும் நிகழ்ச்சிக்குறிப்புக்கள், செயலாளர் மற்றும் தவிசாளரினால் ஒப்பமிடப்பட்டு பதிவேட்டில் வைக்கப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகளின்படி, ஏதேனும் சமுர்த்தி வங்கி அல்லது சமுர்த்தி வங்கித்தொழிற் சங்கங்களுக்கு பணிப்பொன்று அனுப்பத் தேவைப்படுமிடத்து, செயலாளர் இயைபான வங்கி அல்லது வங்கித்தொழிற் சங்கத்திற்கு அத்தகைய பணிப்பை உடனடியாக ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

13. அறிவித்தல்கள் :

(1) செயலாளர், ஒவ்வொரு கூட்டத்தின் அறிவித்தல்களை, அத்தகைய கூட்டத்திற்கு சமுகமளிக்கத் தகவுடையவராகவுள்ள ஒவ்வொரு சமுர்த்தி வங்கித்தொழிற் சங்கத்திற்கும் அனுப்புதல் வேண்டும்.

(2) அறிவித்தல் ஒவ்வொன்றும், முறையான வங்கித்தொழிற் சங்கத்தின் பிரதான அலுவலகத்துக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

ஆயினும் எவ்வாறாயினும், ஏதேனும் வேறு நியாயமானமுறையில், முறையான வங்கித்தொழிற் சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டு அத்தகைய சங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லா அறிவித்தல்களும், உரிய முறையில் ஒப்படைக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) கூட்டங்களின் அறிவித்தல்கள், கூட்டத் தேதிக்கு 14 நாட்களுக்கு முன்னர் அனுப்பப்படுதல் வேண்டும்.

(4) மேலதிகமாக, அத்தகைய ஒவ்வொரு அறிவித்தலும், சமாசத்தின் பிரதான அலுவலகத்தின் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிவித்தல்கள், கூட்டத்திற்கு முன் 7 நாட்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றிற்கு காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்;

ஆயின், விசேட பொதுக்கூட்டமொன்றின் அறிவித்தலொன்று குறைந்தது 5 வேலை நாட்களுக்கு முன்னர் அனுப்பப்படுதல் வேண்டும்.

(5) அவசர விடயமொன்றின் காரணமாக சபையின் கூட்டமொன்று நடைபெறுகின்ற சந்தர்ப்பத்தில் முறையான அறிவித்தலானது சபையின் முறையான உறுப்பினரால் கடைசியாக வழங்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவல் சேவை மூலம் அல்லது அத்தகைய உறுப்பினரால் வழங்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படலாம்.

14. கூட்ட நடப்பெண் :

(1) சபையின் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண், குறைந்தது ஐந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர்கள், பதவிவழிப் பணிப்பாளர் ஒருவர் மற்றும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் உள்ளடங்கலாக ஏழு உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும்.

(2) பொதுக்கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண், மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் ஒன்றிற்குச் சமமான அத்தகைய உறுப்பினர்கள் எண்ணிக்கையாகும்.

(3) அறிவித்தலின்றி, சபையின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு சமுகமளிக்கத் தவறும் எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும். புதிய பணிப்பாளர் ஒருவர், பந்தி 7 இன் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு சபைக்கு நியமிக்கப்படுதல் வேண்டும்.

15. வாக்களிக்கும் தத்துவம் : (1) சமாசத்தின் பங்குதாரரான ஒவ்வொரு சமுர்த்தி வங்கித் தொழிற்சங்கமும், ஏதேனும் பொதுக்கூட்டமொன்றில் ஏதேனும் தீர்மானத்தை நிறைவேற்ற வாக்களிப்பதற்கு உரித்துடையவராவார்.

வாக்குகள் சமமாகின்ற பட்சத்தில், தலைமைதாங்கும் ஆள் அறுதியிடும் வாக்கை அளிப்பதற்கு உரித்துடையவராவார்.

(2) சபையால் தீர்மானிக்கப்படுகின்றவை தவிர்ந்த ஒவ்வொரு தீர்மானமும் சாதாரண பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்; அது வருகை தந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் 2/3 பெரும்பான்மை வாக்கொன்றினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(3) தவிசாளர், துணைத்தவிசாளர் அல்லது தவிசாளர் மற்றும் துணைத் தவிசாளர் இருவரும் வருகை தராதவிடத்து, ஏதேனும் முறையான சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கத்தின் சார்பாக வருகை தருகின்றவரான நிறைவேற்றுக்குழுவின் எவரேனும் உறுப்பினர், சமாசத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் அத்தகைய சங்கம் சார்பாக வாக்களிப்பதற்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

(4) சபையின் தவிசாளர், வங்கித்தொழிற் சமாசத்தின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர் வருகைதராதவிடத்து துணைத்தவிசாளர் தலைமை வகித்தல் வேண்டுமென்பதுடன், தவிசாளர் மற்றும் துணைத் தவிசாளர் ஆகிய இருவரும் வருகை தராதவிடத்து, பணிப்பாளர் ஒருவர், அத்தகைய கூட்டத்துக்கு தலைமை வகிக்கவென வருகைதரும் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர்களுக்கு மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் 03

*நிதியம்*

16. (1) சமாசம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிதியத்திற்கு பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும்.

(அ) சமுர்த்தி வங்கித்தொழிற் சங்கங்களுக்கு பங்குகளை வழங்குவதிலிருந்து திரண்ட அத்தகைய எல்லாப் பணத் தொகைகள்;

(ஆ) திணைக்களத்தால் காலத்துக்குக்காலம் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள்; அத்துடன்

(இ) முதலீடுகளின் இலாபங்கள் மட்டும் வட்டிகளாக பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள்.

(3) நிதியத்தின் பணங்கள், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வங்கிகளில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய ஏதேனும் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட நிதிகளின் முகாமை, பணிப்பாளர் தலைமையதிபதியின் பணிப்புக்கு அமைய சபையினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

[ஒழுங்குவிதி 7]

**அட்டவணை ஈ**

**உறுப்பாண்மை அட்டை**

**.............................. சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பு**

மாவட்டம்:- ............... பிரதேச செயலாளர் பிரிவு:-................ கி. அ. பிரிவு:-................
பதிவு இலக்கம்:- ..............................
உறுப்பினரின் பெயர் :- .......................................
முகவரி :-.......................................
பிறந்த திகதி :- .......................................
தேசிய அடையாள அட்டை இல. :- ..............................
வழங்கிய திகதி :- ............................................

.............................. ..............................
தவிசாளர் செயலாளர்

சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்:-.....................................................

........................................
சமுர்த்தி முகாமையாளர்
(அலுவலக முத்திரை)

[ஒழுங்குவிதி 8]

**அட்டவணை இ**

*03-947/1*

*ச.வ.பி 13/2013 (ஒழுங்குவிதிகள்)*

***2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சமுர்த்திச் சட்டம்***

*2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க,சமுர்த்திச் சட்டத்தின் பிரிவுகள் 25(2) மற்றும் 29(2) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 42 ஆம் பிரிவின்கீழ் சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

எஸ். பீ. திசாநாயக்க,
சமூக வலுவூட்டல் மற்றும்
நலனோம்புகை அமைச்சர்.

கொழும்பு,
2017, மாச்சு 06.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க,சமுர்த்தி ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள்,சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற் சங்கங்கள் மற்றும் அதன் வேறு இடைநேர் விளைவான கருமங்களையும் பதிவு செய்தலை ஏற்பாடு செய்கிறது.

3. (1) சட்டத்தின் 25 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கி மற்றும் 29 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற் சங்கம் ஒவ்வொன்றும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட பெயரொன்றின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(2) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கி அல்லது சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற் சங்கம் ஒவ்வொன்றும் எந்தப் பெயரின்கீழ் அத்தகைய வங்கி அல்லது சங்கம் பதிவு செய்யப்படுகிறதோ அந்தப் பெயர், இயைபான வங்கி அல்லது சங்கத்தின் அதிகார இடப்பரப்பை சுட்டிக்காட்டும் சொல்லமைப்பொன்றை உள்ளடக்குதல் வேண்டும் என்பதுடன் விடயத்துக்கேற்ப "சமுதாய அடிப்படையிலான வங்கி" அல்லது "சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற் சங்கம்" என்ற சொல்லமைப்புக்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.

4. சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற் சங்கங்களைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள், பொருளளவில் இதற்கான அட்டவணை 'அ' வின்பாகம் I மற்றும் பாகம் II இல் முறையே குறித்துரைக்கப்பட்ட படிவங்களில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு ஆக்கப்படுதல் வேண்டும்.

5. (1) நான்காம் ஒழுங்குவிதியின்கீழ் ஆக்கப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியொன்றின் அல்லது சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற் சங்கமொன்றின் விண்ணப்பம் ஒன்றை பெற்றுக்கொண்டதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதியானவர் நம்பகமான மூலங்களினூடாக விண்ணப்பத்தில் சொல்லப்பட்ட நிகழ்வுகளை சரிபார்க்கவும்,இயைபான வங்கியை அல்லது சங்கத்தைப் பதிவுசெய்வதற்கு தோதானதா என விதப்புரைகளை ஆக்குவதற்கும் அதன்சார்பில் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட திணைக்களத்தின் அலுவலர் ஒருவரைப் பணித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், (1) ஆம் பந்தியின்கீழ் பெறப்பட்ட விதப்புரைகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து முப்பது நாட்கள் காலப்பகுதியொன்றினுள் இயைபான வங்கியை அல்லது சங்கத்தைப் பதிவுசெய்தல் வேண்டும்.

(3) ஓராம் பந்தியின்கீழ் பெறப்பட்ட விதப்புரைகளைக் கருத்திற்கொண்டதன் பின்னர், அத்தகைய பதிவை நாடுகின்ற இயைபான சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கி அல்லது சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழில் சங்கமொன்றைப் பதிவுசெய்தல் தோதாகவிராதுள்ளதெனப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குத் தோன்றுமிடத்து, அவர் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக பதிவை வழங்க மறுக்கலாம்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபு, அத்தகைய விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு நாட்கள் காலப்பகுதியொன்றினுள் இயைபான சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கி அல்லது சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கத்திற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் பதிவுசெய்யப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கி ஒவ்வொன்றிற்கும் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கம் ஒவ்வொன்றிற்கும், இதற்கான அட்டவணை 'ஆ' வின் பாகம் I மற்றும் பாகம் II இல் முறையே குறித்துரைக்கப்பட்ட படிவங்களில் பதிவுச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டும்.

(6) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கி ஒவ்வொன்றினதும் அல்லது சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கம் ஒவ்வொன்றினதும் பதிவு, ஒவ்வோராண்டின் மார்ச்சு முப்பத்தோராம் திகதிக்கு முன்னரான ஆகக்குறைந்தது முப்பது நாட்களில் ஒழுங்குவிதி 4 இன்கீழ் விண்ணப்பமொன்றை செய்வதன்மூலம் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.

6. சட்டத்தின் 34 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்டதான சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சமாசத்தின் பணிப்பாளர் சபையானது சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களுடன் தொடர்பான பின்வரும் கருமங்களைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பில் காலத்துக்குக்காலம் எழுத்திலான வழிகாட்டி நெறிகளை வழங்குதலும் வேண்டும்:-

(அ) ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கி மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கத்தின் ஆளும் குழுவின் நியமனம், உறுப்பினர்களின் எண்ணிக்கை, பதவிக்காலம், நீக்குதல் மற்றும் பதவி விலகுகையும்;

(ஆ) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களின் ஆளும் குழுக்களின் கூட்டங்களை நடாத்துதலும், அத்தகைய கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண்ணும் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நடாத்துதலும்;

(இ) அவர்களின் குறிக்கோள்களை எய்துவதற்காக சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களின் பணியாட்டொகுதியினர் மற்றும் வேறு சேவை வழங்குநர்களை நியமித்தலும்.

ஆயின், எவ்வாறாயினும், பணிப்பாளர் தலைமையதிபதி ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறான சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சமாசத்தின் பணிப்பாளர்களின் முதலாவது சபை நியமிக்கப்படும்வரை இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்காக ஏதேனும் வழிகாட்டியை வழங்குதல் வேண்டும்.

7. (1) (இதனகத்துப்பின்னர் "முகாமைச்சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சட்டத்தின் 33 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகளினதும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களினதும் முகாமைச் சபையானது, பின்வருவன உள்ளடங்கலாக சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகளினதும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களினதும் நிதிசார்ந்த செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்தலுடன் தொடர்பான எல்லா விடயங்களையும் காலத்துக்குக்காலம் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன் அதற்காக காலத்துக்குக்காலம் பணிப்புக்களை வழங்குதலும் வேண்டும்:-

(அ) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களுக்கான பதிவுக்கட்டணம்;

(ஆ) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களின் ஆளும் குழுக்களின் உறுப்பினர்களுக்கு செலுத்தப்படத்தக்கதான படிகளும்;

(இ) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களின் பணியாட்டொகுதியினருக்குச் செலுத்தப்பட வேண்டிய ஊதியம் மற்றும் சேவை வழங்குநர்களுக்கு செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவுகள் எவையேனும் இருப்பினும்;

(ஈ) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியொன்றினால் அதனது உறுப்பினர்களுக்கு வழங்கப்படமுடியுமான கடன்களும் வேறு நிதிசார்ந்த சேவைகளும் மற்றும் அத்தகைய சேவைகளுக்கு ஏற்புடையற்பாலனவான கடன்களின் வரவுக்காலப்பகுதி, கடன்கள் மற்றும் வைப்புக்களுக்கான வட்டிவீதங்கள் மற்றும் கடன்களின் அதிகபட்ச அளவு போன்ற நியதிகளும் நிபந்தனைகளும்;

(உ) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியொன்றினால் அத்தகைய வங்கியின் உறுப்பினர்கள் அல்லாதவர்களுக்கு வழங்கப்படமுடியுமான நிதிசார்ந்த சேவைகளும் அத்தகைய சேவைகளுக்கு ஏற்புடையற்பாலனவான நியதிகளும் நிபந்தனைகளும்.

(2) முகாமைச் சபையின் எல்லா முடிபுகளும், அத்தகைய ஏதேனும் முடிபை எடுக்கக் கூட்டப்பட்ட கூட்டமொன்றில் பெரும்பான்மை வாக்குகளால் எடுக்கப்படுதல் வேண்டும்; முகாமைச் சபையின் அரைவாசி உறுப்பினர்கள் சமுகமளித்து வாக்களித்து எடுத்த முடிபாக இருத்தலும் வேண்டும்.

8. (1) ஏதேனும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியின் பங்குகள் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பு அல்லது சட்டத்தின் பிரிவு 25(1) இன்கீழ் எந்த இடப்பரப்பு தொடர்பில் அத்தகைய வங்கி தாபிக்கப்படுகிறதோ அந்த இடப்பரப்பினுள் தொழிற்படும் ஒழுங்கமைப்புக்களின் உறுப்பினர்களால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(2) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியொன்றின் பங்குதாரர் ஒவ்வொருவரும் அத்தகைய சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியின் உறுப்பினரொருவராக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வங்கியினால் வழங்கப்படும் நுண் நிதியளிப்புச் சேவைகளைப் பெறுவதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

9. (1) ஏதேனும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கமொன்றின் பங்குகள் சட்டத்தின் பிரிவு 29(1) இன்கீழ் எந்த இடப்பரப்பு தொடர்பில் அத்தகைய வங்கித்தொழிற் சங்கம் தாபிக்கப்படுகிறதோ அந்த இடப்பரப்பினுள் தொழிற்படும் பதிவுசெய்யப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகளினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(2) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கமொன்றின் பங்குதாரர் ஒவ்வொருவரும் அத்தகைய சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கத்தின் நிறுவனம்சார் உறுப்பினரொருவராக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வங்கித்தொழிற் சங்கத்தினால் தாபிக்கப்பட்ட நுண் நிதியளிப்பு வலையமைப்புடன் தொடர்பான சேவைகளைப் பெறுவதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

10. (1) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சமாசத்தின் பங்குகள், இவ்வொழுங்குவிதிகளின்கீழ் பதிவுசெய்யப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கம் ஒவ்வொன்றினதும் உறுப்பினர்களால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(2) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சமாசத்தின் பங்குதாரர் ஒவ்வொருவரும் அத்தகைய சமாசத்தின் நிறுவனம்சார் உறுப்பினரொருவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சமாசத்தினால் அத்தகைய நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு முனையப்பட்ட சேவைகளைப் பெறுவதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

11. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலன்றி-

"சட்டம்" என்பது, 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க,சமுர்த்திச் சட்டம் எனப் பொருள்படும்;

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, சட்டத்தின் பிரிவு 3 இன்கீழ் நியமிக்கப்பட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

"திணைக்களம்" என்பது, சட்டத்தின் பிரிவு 2 இன்கீழ் தாபிக்கப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் எனப் பொருள்படும்;

"ஆளும் குழு" என்பது, விடயத்துக்கு ஏற்ப சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியின் முகாமைச் சபை அல்லது சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு எனப் பொருள்படும்.

***(ஒழுங்குவிதி 4)***

விண்ணப்ப இல. **D/B/R/01**

***அட்டவணை அ - பாகம் I***

அலுவலகப் பாவனைக்கு மட்டும்
தொடர்புகுறி:-
விண்ணப்பம் பெற்றுக்கொண்ட திகதி:-
வங்கியின் பதிவு இல:-
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்:-

*சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியினை பதிவு செய்வதற்கான விண்ணப்பம்.*

(1) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியின் பெயர்: ……………………………………………..

(2) முகவரி :-……………………………………………………………………………………………..

(3) தொலைபேசி இலக்கம்:- …………………………… மின்னஞ்சல் முகவரி:- ……………………………

(4) அதிகார இடப்பிரதேசம்: ………………… மாகாணம்……………….. மாவட்டம்……………………..

பிரதேச செயலாளர் பிரிவு: இணைப்பு 01 இல் கூறப்பட்ட சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளினால் மேவுகின்ற அதிகார இடப்பிரதேசமொன்றாகவுள்ள புவியியல் அதிகார இடப்பிரதேசம்.

(5) மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிருவாக இல:- …………………………………………………………

(6) எவ்வங்கியின் கீழ் பிரதேச செயலாளர் பிரிவு வருகின்றதோ அப்பிரதேச செயலாளர் பிரிவின் நிருவாக இல: ……………………

(7) வங்கி/வலயத்திற்கு ஒதுக்கப்பட்ட இல: ………………………………………………………………..

(8) எவ்வங்கியின்கீழ் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கம் வருகின்றதோ அவ்வங்கியின் பெயர்:- ………………

(9) பொதுக் கூட்டங்களின் விபரங்கள் (இணைப்பு 02)

(10) முகாமைச் சபையின் விபரங்கள் (இணைப்பு 3)

(11) வங்கியின் பங்குதாரர்களின் விபரங்கள் (31/12/20…… அன்று உள்ளவாறு)

31/12/20.

| | இல. | தொகை |
|---|---|---|
| பெண்கள் | ……………… | …………… |
| ஆண்கள் | …………….. | …………… |
| மொத்தம் | ========================================== | |

(12) 31/12/20………….. அன்று உள்ளவாறான நிதிக் கூற்றிற்கிணங்க…………………………………………

மொத்தச் சொத்துக்கள் :- ……………………………

மொத்தப் பொறுப்புடைமைகள்:- ……………………………………………. (இணைப்பு 4)

(13) வருமானக் கூற்றிற்கிணங்க ………………… ஆண்டு முடிவிற்கான தேறிய இலாபம் அல்லது நட்டம் (இணைப்பு 05 இல் காட்டப்பட்ட விபரங்கள்)

(14) பதிவுக்கு விண்ணப்பிக்கப்பட்டமைக்கான ஆண்டு:.........................................

........................ரூபாவுக்கான ................. திகதியிடப்பட்ட இலங்கைவங்கி/மக்கள் வங்கி காசோலை இல.................... ஆண்டிறுதி பதிவுக் கட்டணத்துக்காக அனுப்பப்பட்டது. மேலே கொடுக்கப்பட்ட தகவல்கள் சரியானவையென்று இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன் என்பதுடன் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் எமது வங்கியை பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கௌரவ தவிசாளரின் கையொப்பம்:-
பெயர்:-
அலுவலக முத்திரை:-

கௌரவ செயலாளரின் கையொப்பம்:-
பெயர்:-
அலுவலக முத்திரை:-

மேலேயுள்ள தகவல்கள் மற்றும் இணைப்பில் காட்டப்படும் தகவல்கள் சரியானவை என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கத்தின் சிரேட்ட முகாமையாளரின் பெயர்:-

கையொப்பம் :-

சமுதாய அடிப்படையிலான வங்கிச் சங்கத்தின் பெயர்:-

இணைப்பு - 01

.................................. இல் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கியின் அதிகாரசபையின் இடப்பிரதேசத்தின்கீழ் வருகின்ற சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் பட்டியல்,

பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் :-

சமுதாய அடிப்படையிலான வங்கியின் பெயர்:-

| தொடர் இலக்கம் | கிராம அலுவலர் பிரிவு மற்றும் இலக்கம் | | சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பின் பெயர் | முகவரி |
|---|---|---|---|---|
| 01 | | 1 | | |
| | | 2 | | |
| | | 3 | | |
| | | 4 | | |
| | | 5 | | |
| 02 | | 6 | | |
| | | 7 | | |
| | | 8 | | |
| | | 9 | | |
| | | 10 | | |
| 03 | | 11 | | |
| | | 12 | | |
| | | 13 | | |
| | | 14 | | |
| | | 15 | | |

| தொடர் இலக்கம் | கிராம அலுவலர் பிரிவு மற்றும் இலக்கம் | | சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பின் பெயர் | முகவரி |
|---|---|---|---|---|
| 04 | | 16 | | |
| | | 17 | | |
| | | 18 | | |
| | | 19 | | |
| | | 20 | | |
| 05 | | 21 | | |
| | | 22 | | |
| | | 23 | | |
| | | 24 | | |
| | | 25 | | |

**குறிப்பு :**

(இவ்வாவணம் முதலாம் தரம் பதிவு இடம்பெறும்போது மட்டும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் பதிவுக்காக ஆண்டிறுதியில் விபரங்களைக் கொடுத்துதவும் போது,சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் மாற்றங்கள் மட்டும் இவ்வாவணத்தினூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.)

(இணைப்பு 02)

**பொதுக்கூட்டங்களும் முகாமைத்துவச் சபைக் கூட்டங்களும்**

| | |
|---|---|
| ஆண்டிறுதிப் பொதுக்கூட்டம் நடைபெற்ற திகதி | |
| ஏற்புடையதான, விசேட பொதுக்கூட்டங்கள் நடைபெற்ற திகதிகள் | |

**முகாமைச் சபைக் கூட்டங்கள்**

| | |
|---|---|
| இவ்வாண்டின்போது வைத்திருக்கப்படும் கூட்டங்களின் எண்ணிக்கை | |
| இறுதிக்கூட்டம் நடைபெற்ற திகதி | |
| கூட்ட நடப்பெண் இன்மை காரணமாக நடைபெறாத கூட்டங்கள் | |

**குறிப்பு :**

சமுதாய அடிப்படையிலான வங்கியின் முகாமைச்சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளவிடத்து, பொதுக் கூட்டத்தின் குறிப்புகளின் பிரதியொன்று சமுதாய அடிப்படையிலான வங்கியின் முகாமையாளரினால் இவ்வத்தாட்சிப்படுத்தலுக்காக இணைக்கப்படுதல் வேண்டும்.

(இணைப்பு 03)

**முகாமைச் சபை பற்றிய விபரங்கள்**

| | | தொலைபேசி இல: |
|---|---|---|
| தவிசாளரின் பெயர் | | |
| பிரதி தவிசாளரின் பெயர் | | |
| செயலாளரின் பெயர் | | |

| முகாமைச் சபையின் உறுப்பினர்களின் பெயர்கள் (தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளரின் பெயர்கள் உள்ளடங்கலாக) | முகவரி | சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பின் பெயர் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

பிரதேச செயலாளர் பிரிவின் பெயர்:-

சமுதாய அடிப்படையிலான வங்கியின் பெயர்:-

(இணைப்பு 04)

**சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கி .......................................**
**..................................................... ஆந் திகதியன்றுள்ளவாறான நிதிக்கூற்று**

| சொத்துக்கள் | ஆண்டு | ஆண்டு | வேறுபாடு% |
|---|---|---|---|
| ஒழித்துக்கட்டப்பட்ட சொத்துக்கள் | | | |
| **ஒழித்துக்கட்டப்படாத சொத்துக்கள்** | | | |
| முதலீடுகள் | | | |
| கடன்கள் | | | |
| காகிதாதி இருப்பு | | | |
| பெறுவனவுகள் | | | |
| ஏனைய சொத்துக்கள் | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனம் | | | |
| **மொத்தச் சொத்துக்கள்** | | | |
| **பொறுப்புடைமைகள்** | | | |
| வைப்புக்கள் | | | |
| மீள் நிதியளிப்பு | | | |
| கொடுப்பனவுகள் | | | |
| ஒதுக்கங்கள் | | | |
| நிதியங்கள் | | | |
| ஏனையவை | | | |
| கோரிக்கைகள் | | | |
| மொத்தப் பொறுப்புடைமைகள் | | | |

...................... அன்றுள்ளவாறு இதனுடன் ஐந்தொகையுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படும் கணக்கீட்டு பதிவேடுகள் மற்றும் .................... ஆண்டு முடிவிற்காக தயாரிக்கப்பட்ட இலாபக் கூற்று என்பன சரியென இத்தால் நாங்கள் மெய்யுறுதிப்படுத்துகின்றோம்.

சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்க,
முகாமையாளரின் கையொப்பம்:- .............................
பெயர் :
திகதி :

தவிசாளரின் கையொப்பம் :
பெயர் :
திகதி :

இணைப்பு 05

**சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கி ................................................................**
**................................................................ ஆம் ஆண்டு முடிவிற்கான இலாபக் கூற்று**

| | ஆண்டு............. | ஆண்டு............. | வேறுபாடு% |
|---|---|---|---|
| 1. வருமான வட்டி | | | |
| 2. செலவின வட்டி | | | |
| 3. தேறிய வட்டி இலாபம் | | | |
| 4. ஏனைய இலாபம் | | | |
| 5. தொழிற்பாட்டு வருமானம் | | | |

**தொழிற்பாட்டு வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| 1. நிருவாகச் செலவு | | | |
| 2. தாபனச் செலவு | | | |
| 3. காப்புறுதிச் செலவினம் | | | |
| 4. ஒதுக்கங்களுக்கான ஏற்பாடுகள் | | | |
| 5. ஏனைய செலவினம் | | | |
| 6. தேறிய இலாபம் /(நட்டம்) | | | |

மேலேயுள்ள தகவல்கள் சரியென அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

முகாமையாளரின் கையொப்பம் :
பெயர் :
திகதி :

தவிசாளரின் கையொப்பம் :
பெயர் :
திகதி :

விண்ணப்ப இல. **D/B/R/02**

**அட்டவணை அ - பாகம் 2**

| |
|---|
| அலுவலக பாவனைக்கு மட்டும் |
| தொடர்பு குறி இல:- |
| விண்ணப்பம் பெற்றுக்கொண்ட திகதி:- |
| வங்கியின் பதிவு இல:- |
| அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்:- |

சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்

(1) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கத்தின் பெயர்:-....................................
..........................................................................................................................

(2) முகவரி :-......................................................................................................

(3) தொலைபேசி இலக்கம்:- ................................ மின்னஞ்சல் முகவரி:- ..............................

(4) அதிகார சபையின் இடப்பிரதேசம் :..................... மாகாணம் :................... பிரதேச செயலாளர் பிரிவு :.........................

(5) மாவட்டத்திற்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள நிருவாக இலக்கம்:- ......................................பிரதேச செயலாளர் பிரிவின் நிருவாக இல:- ..............................

(6) சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற் சங்கத்தின் கீழ் வருகின்ற சமுதாய அடிப்படையிலான வங்கிகளின் பெயர்கள்:- ...........................................................................

(7) தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களின் பட்டியல் (இணைப்பு 01)

(8) 31/12/20 ................. அன்றுள்ளவாறான நிதிக் கூற்றுக்கிணங்க-

மொத்தச் சொத்துக்கள் :- ................................ (இணைப்பு 2)

மொத்தப் பொறுப்புடைமைகள்:- .................................

(9) இலாபக் கூற்றிற்கிணங்க .....................ஆம் ஆண்டு முடிவிற்கான தேறிய இலாபம் அல்லது நட்டம் (இணைப்பு 03 இல் காட்டப்பட்டுள்ள விபரங்கள்)

(10) பொதுக் கூட்டங்கள்

ஆண்டிறுதி பொதுக்கூட்டம் நடைபெற்ற திகதி :- .................................................................

விசேட பொதுக்கூட்டங்கள் நடைபெற்ற திகதிகள் :- ...............................................................

(11) பதிவுக்காக விண்ணப்பிக்கப்பட்ட ஆண்டு:..........................................

....................... ரூபாவுக்கான .............. திகதியிடப்பட்ட .................. இலங்கை வங்கி/மக்கள் வங்கி காசோலை இல. ................ ஆனது ஆண்டிறுதி பதிவுக் கட்டணமொன்றுக்காக அனுப்பப்பட்டது. மேலே கொடுத்துதவப்பட்ட தகவலானது சரியானதெனவும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தில் எமது வங்கித்தொழிற் சங்கமானது பதிவுசெய்யப்பட வேண்டுமென தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

கௌரவ தவிசாளரின் கையொப்பம்:-
பெயர்:-
அலுவலக முத்திரை:-

கௌரவ செயலாளரின் கையொப்பம்:-
பெயர்:-
அலுவலக முத்திரை:-

மேலேயுள்ள தகவல் மற்றும் இணைப்புக்களில் காட்டப்பட்டுள்ள தகவல்கள் சரியென இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

அலுவலரின் பெயர் :
முகாமையாளர் / உதவிப் பணிப்பாளரின் பெயர் :
கையொப்பம் :
பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் :

இணைப்பு 01

**சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல்**

சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கத்தின் பெயர் ....................................................

| | முகவரி | தொலைபேசி இல. |
|---|---|---|
| தவிசாளரின் பெயர் | | |
| பிரதித் தவிசாளரின் பெயர் | | |
| செயலாளரின் பெயர் | | |

ஏனைய நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களின் விபரங்கள்

| தொடரிலக்கம் | நிறைவேற்றுக் குழு உறுப்பினரின் பெயர் | முகவரி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

**குறிப்பு**

சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யபட்டுள்ளவிடத்து, ஆண்டிறுதி பொதுக் கூட்டத்தின் குறிப்புகளின் பிரதி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கத்தின் முகாமையாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு இத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

இணைப்பு 02

**சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற்சங்கம் .....................................................................**
**..................................................................... அன்றுள்ளவாறான நிதிக்கூற்று**

| சொத்துக்கள் | ஆண்டு | ஆண்டு | வேறுபாடு% |
|---|---|---|---|
| ஒழித்துக்கட்டப்பட்ட சொத்துக்கள் | | | |
| **ஒழித்துக்கட்டப்படாத சொத்துக்கள்** | | | |
| சேமிப்பு வைப்புக்கள் | | | |
| ஏனைய சொத்துக்கள் | | | |
| பெறுவனவுகள் | | | |
| காகிதாதி இருப்பு | | | |
| பெற்றுக்கொள்ளக்கூடிய மீள்நிதியளிப்பு | | | |
| முதலீடுகள் | | | |
| ஐயத்திற்கிடமான முதலீடுகள் | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | | | |
| **மொத்தச் சொத்துக்கள்** | | | |
| **பொறுப்புடைமைகள்** | | | |
| செலுத்தப்படற்பாலவை | | | |
| செலுத்தப்படற்பாலவையான மீள்நிதியளிப்பு கடன்கள் | | | |
| ஏனைய பொறுப்புடைமைகள் | | | |
| நிதியங்கள் | | | |
| ஒதுக்கம் | | | |
| கோரிக்கைகள் | | | |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | | |

...................... அன்றுள்ளவாறான கணக்கு கூற்றுடன் சேர்த்து இத்துடன் கணக்கீட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும் .................... ஆம் ஆண்டு இறுதிக்காக தயாரிக்கப்பட்ட இலாபக் கூற்று சரியானவையெனவும் இத்தால் நாங்கள் அத்தாட்சிப்படுத்துகின்றோம்.

சிரேட்ட முகாமையாளரின் கையொப்பம்:...........................

பெயர் :

திகதி :

நிறைவேற்றுக் குழு தவிசாளரின்,
கையொப்பம்:...........................

பெயர் :

திகதி :

இணைப்பு 03

**சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கம்**

……………….. இல் முடிவடையும் ஆண்டுக்கான வருமானக்கூற்று

| | ஆண்டு……………… | ஆண்டு………………… |
|---|---|---|
| **தொழிற்பாட்டிலுள்ள வருமானம்** | | |
| கழி: | | |
| **தொழிற்பாட்டிலுள்ள செலவினம்** | | |
| நிருவாகச் செலவுகள் | | |
| தாபனச் செலவுகள் | | |
| காப்புறுதி காப்பீட்டுச் செலவுகள் | | |
| ஒதுக்கங்கள் | | |
| ஏனைய செலவினம் | | |
| வட்டி செலவினம் - மீள்நிதியளிப்புக் கடன்கள் | | |
| தேறிய இலாபம்/நட்டம் | | |

மேலேயுள்ள தகவல் சரியானதென அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

முகாமையாளரின் பெயர்:…………………

கையொப்பம்

தவிசாளரின் பெயர்:

கையொப்பம்

ஒழுங்குவிதி 5 (5)

**அட்டவணை ஆ - பாகம் 1**

**சமுர்த்தித் திணைக்களத்தின்கீழ்**
**சமுதாய அடிப்படையிலான வங்கிகளின் பதிவுச் சான்றிதழ்**

பதிவுச் சான்றிதழ்

2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சமுர்த்திச் சட்டத்தின் 25 (2) இன் ஏற்பாட்டுக்கிணங்க.................. எனும் பதிவு இலக்கத்தின்கீழ் சமுர்த்தித் திணைக்களத்தில் ............................... எனும் முகவரியைச் சேர்ந்த ......................... எனும் சமுதாய அடிப்படையிலான வங்கியானது இத்தால் அத்தாட்சிப்படுத்தப்படுகின்றது.

திகதி........................

பணிப்பாளர் தலைமையதிபதி,
சமுர்த்தித் திணைக்களம்.

**அட்டவணை ஆ - பாகம் 2**

**வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ்**
**சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களின் பதிவுச் சான்றிதழ்**

**பதிவுச் சான்றிதழ்**

................................ எனும் முகவரியைச் சேர்ந்த ......................... எனும் சமுதாய அடிப்படையிலான வங்கியானது 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வாழ்வின் எழுச்சி சட்டத்தின் 29 (2) ஆம் பிரிவின் ஏற்பாட்டிற்கிணங்க .................. ஆம் பதிவிலக்கத்தின்கீழ் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

.........................
திகதி.........................
பணிப்பாளர் தலைமையதிபதி
வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்

03-947/2